விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 16 புதன்கிழமை (29.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

வளியில் காணப்படும் சிறுதுணிக்கைகள் ஊடாக

# மனித உடலுக்கு கொரோனா செல்லக்கூடிய வாய்ப்புள்ளது

## புதிய ஆய்வின் மூலம் தகவல் வெளியீடு

(கொழும்பு)
கொரோனா வைரஸானது அதிக சனநெரிசல் மிக்க இடங்களிலும் காற்றோட்டம் இல்லாத அறைகளிலும் வளியில் தங்கி இருந்து மனிதர்களுக்கு பரவக்கூடும் என்று புதிய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே

## கொரோனா சவால்களை வெற்றிகொள்ள முடியும்



சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)
கோவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை 15

## ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சுகயீனமுற்ற முதியவர் மரணம்

பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது

(கொழும்பு)
கொழும்பு மகரகம பிலியந்தலையில் சுகயீனமுற்ற 82 வயது முதியவர் ஒருவர் இரு நாட்களுக்கு முன் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சுகயீனம்தீவிரமாகிய நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.
அவருக்கு நடத்திய பி சி ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று இருப்பது உறுதியானது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவரின் உடல் நேற்று உடஹமுல்ல பொது மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. 15

கடந்த 24 மணி நேரத்தில்

## ஊரடங்கை மீறிய 1,128 பேர் கைது

(கொழும்பு)
நேற்று 28ஆம் திகதி காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் ஊரடங்கு சட்டத்தை மீறிய 1,128 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த காலப்பகுதிக்குள் 303 வாகனங்கள் பொலிஸா 15

கொரோனா கட்டுப்படுத்தப்படும்

## ஊரடங்கு சட்டம் விரைவில் தளர்த்தக் கூடியதாயிருக்கும்

மதத் தலைவர்களிடம் ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)
கொரோனா நோய்த் தொற்றை விரைவில் கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ஊரடங்கு சட்டம் விரைவில் நாடு முழுவதும் தளர்த்தக் கூடியதாயிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் நேற்று 15

## கொரோனா தொற்றுள்ளோர் 31 பேர் நேற்று அடையாளம்

பாதிக்கப்பட்டோர் 619 ஆக உயர்வு

(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 31 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.
இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 619ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. 15

நேற்று மட்டும்

## 1,553 பேருக்கு கொரோனா பரிசோதனை

(கொழும்பு)
கடந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் 1,553 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள் 15

## 30-50 வயதினருக்கு கொரோனா பாதிப்பால் மனித - உள்ளுறுப்புக்கள் பாதிப்படையும்

அமெரிக்க மருத்துவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படுத்தினால் நீரிழிவு நோய், இதயக்கோளாறு, சிறுநீரக பாதிப்பு உள்ளிட்ட நீண்டகால நோய் பாதிப்புகள் இருப்போர், முதியோர் ஆகியோருக்குத்தான் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும், அவர்களுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தும் என கருத்து நிலவி வந்தது.
ஆனால் சமீபத்திய அமெரிக்க மருத்துவர்கள் ஆய்வில் 30 வயது முதல் 50 வயதுக்குள் இருப்போர் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகினால் உடலின் முக்கிய உறுப்புகள் பாதிக்கப்படும். 15

## கொரோனாவை கடுப்படுத்துவதற்கு

விசேட மீளாய்வு கூட்டம்

(கொழும்பு)
கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாட சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட செய 15

யாழ்ப்பாண மாவட்டத்தில்

## கொரோனா தொற்றுக்குள்ளான 5ஆவது நபரும் குணமடைந்தார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி அடையாளம் காணப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக வெலிகந்த சிறப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட மற்றுமொரு நபரும் பூரண குணமடைந்துள்ளார்.
அவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையின் 15

## கைது செய்யப்படுபவர்களை பொலிஸ் துன்புறுத்தக் கூடாது

மனித உரிமை ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையுடன் தொடர்புடைய கைது சம்பவங்கள் நாட்டின் சட்டங்களுக்கு அமைவானதாக இருக்க வேண்டும் என, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடுகம, பதில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## முகாமைத்துவ பீடத்தில் முகாம் அமையாது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பாற்பண்ணை வீதியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் படையினரின் தனிமைப் படுத்தல் முகாம் அமையாது என முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார்.

ஏலவே குறித்த இடத்தில் படையினரின் தனிமைப்படுத்தல் முகாம் அமையலாம் எனச் செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மதமாற்றத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக விசாரணை ஆணைக்குழுவை நிறுவுக

## சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடக்கில் மதமாற்றத்தில் ஈடுபடும் சபையினருக்கு எதிராக விசேட ஆணைக் குழு ஒன்று நிறுவப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.அரியாலையில் உள்ள பில்தெனியா ஆலயத்திற்கு முன்னால் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் மதமாற்ற சபைகள் நிறைந்து காணப்படுகின்றன. அவை எந்த சட்டத்திற்கு உட்பட்டு செயற்படுகின்றன என்பது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பில்தெனியா ஆலயமானது ஒரு வயல் காணியில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு யார் அனுமதி கொடுத்தது.

நல்லூர் பிரதேச சபை என்றால் அதனை நிர்வகிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரே. இந்த மத மாற்றத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் கூட்டமைப் பினரே. இந்த ஆலயம் அமைப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளார்கள்.

எனவே இது தொடர்பில் விசேட ஆணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

### எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை

## விபரீத முடிவெடுத்த முல்லை மாணவி

(முல்லைத்தீவு)
வெளியாகியுள்ள சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு எதிர்பார்த்தளவு கிடைக்கவில்லை என்ற விரக்தியில் மாணவி ஒருவர் நேற்றுக் காலை விபரீத முடிவால் உயிரி ழந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த சந்திரன் கம்சிகா (வயது-17) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றினார் என்றும் அவர் 9ஏ பெறுபேற்றை எதிர்பார்த்ததாகவும் அப்பெறு பேற்றை விட குறைவான பெறுபேறு கிடைத்ததால் மன உளைச்சலடைந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவி சாதாரண தரப் பரீட்சையில் 2ஏ, 3பி, 2சி, எஸ் சித்தியை பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாணவியின் இறப்பு தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளதோடு, சடலம் பிரேத பரிசோதனைக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள. (ம-3,281)

# ஆயிரம் குடும்பங்களுக்கு உணவுப் பொருள் உதவி

## ‘தாயகம்’ அறக்கட்டளை வழங்கியது

(யாழ்ப்பாணம்)
கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு தாயகம் அறக்கட்டளை நிறுவனத்தால் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தாயகம் அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் வீ.சிறீதரன் அவர்களின் ஏற்பாட்டில் வழங்கப்படும் இவ் உதவித் திட்டத்தில் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தாயகம் அறக்கட்டளை நிறுவனம் வசதி குறைந்த மாணவர்களுக்குச் சீருடைகளையும் கற்றல் உபகரணங்களையும் ஏற்கெனவே வழங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### கொரோனா வைரஸ் பரவும் வீதம்

# ஏனைய நாடுகளை விட இலங்கையில் தீவிரம்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவும் வேகம் உலகின் ஏனைய நாடுகளை விடவும் உயர் மட்டத்தில் காணப்படுவதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் இலங்கையில் கொரோனா பரவும் வேகம் 12.43 வீதமாக உள்ளதென குறிப்பிடப்படுகின்றது.

உலகில் கொரோனா வைரஸ் வேகம் 2.33% அளவிலேயே காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

வைரஸ் தீவிரமடைந்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா 2.32%, ஸ்பெயின் 1.23%, இத்தாலி 0.88%, பிரான்ஸ் 2.31% மற்றும் ஜேர்மனி 0.63% ஆகிய வேகத்தில் கொரோனா பரவியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (ம-3)

துயர் பகிர்கின்றோம்
எமது கல்லூரியின் பகுதித் தலைவர்
திரு. சி.சிவரதீஸ் அவர்களின் தந்தையார்
அமரர் நவரத்தினம் சிவசக்திவேல்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/மகாஜன கல்லூரி, தெல்லிப்பளை.
(C-9444)

மணிவிழா வாழ்த்துக்கள்

திரு.
இரத்தினசபாபதி உமாசங்கர்
(பதவி நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர், விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ்.பல்கலைக்கழகம்)
27.04.1960
யாழ்.பல்கலைக்கழக நிதிக்கிளை, விளையாட்டு விஞ்ஞான அலகு ஆகியவற்றில் 28 வருடங்கள் சேவையாற்றி 27.04.2020இல் ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் எமது அன்புச் சகோதரன் திரு. இரத்தினசபாபதி உமாசங்கர் அவர்கள் இறைவன் திருவருளால் நீடூழி காலம் வாழ வேண்டுமென அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: அன்புச் சகோதரர்கள்
திருமதி அநுசூயா ரஞ்சன், திரு. இ.சிவசங்கர் (அதிபர்)
திரு. இ. உதயசங்கர் (ஆசிரியர்)
திரு. இ.பிரபோசங்கர் (ஆசிரியர்)
“திருவள்ளுவர் அகம்”
வதிரி.
(C-9543)

கண்ணீர் அஞ்சலி

அமரர்
இரத்தினம் சிவலிங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க மூத்த அங்கத்தவரும் பல தசாப்தங்களாக பழைய மாணவர் சங்க நிர்வாக சபையில் உப தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக சபை உறுப்பினராக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.
(C-9545)

## கருத்து வேறுபாடுகளைக் குறைக்க, மக்களைக் கட்டுப்படுத்த

# அவசரகால சட்டத்தை ஒரு ஆயுதமாக அரசாங்கங்கள் பயன்படுத்தக்கூடாது

## இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இடித்துரைப்பு



(ஜெனிவா)

கொவிட்-19 தொற்றுநோயால் அவசரகால நிலைகளை அறிவித்த பல நாடுகளில் பொலிஸார் ஆயிரக்கணக்கான மக்களைக் கைது செய்து அல்லது தடுத்து வைத்து மற்றும் கொலை செய்தமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டது.

கருத்து வேறுபாடுகளைக் குறைக்கவும், மக்களைக் கட்டுப்படுத்தவும் அவசரகால சட்டத்தை ஒரு ஆயுதமாக அரசாங்கங்கள் பயன்படுத்தக்கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வலியுறுத்தினார்.

கொரோனா வைரஸ் காரணமாக சுமார் 80 நாடுகள் அவசர நிலைகளை அறிவித்துள்ளன. அவற்றில் 15 நாடுகளில் பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகளவாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதில் நைஜீரியா, கென்யா, தென்னாபிரிக்கா, பிலிப்பைன்ஸ், இலங்கை, எல் சல்வடோர், டொமினிகன் குடியரசு, பெரு, ஹோண்டுராஸ், ஜோர்தான், மொராக்கோ, கம்போடியா, உஸ்பெகிஸ்தான், ஈரான் மற்றும் ஹங்கேரி என்பன உள்ளடங்குகின்றன.

இந்த நாடுகளில் கொரோனா தொற்றுநோயுடன் தொடர்புடைய கட்டுப்பாடுகளை மீறியதற்காக பல்லாயிரக்கணக்கான மக்களை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். கடந்த 30 நாட்களில் ஊரடங்கு உத்தரவு மீறல்களுக்காக கைது செய்யப்பட்ட ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேருடன் பிலிப்பைன்ஸ் முதலிடத்திலுள்ளது.

தென்னாபிரிக்காவில் றப்பர் தோட்டாக்கள், கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம் மற்றும் சவுக்கு ஆகியவற்றைப் பயன்படுத்தி தாக்குதலை நடத்தியதாக தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

இதேவேளை, நைஜீரியாவில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் என்ற பேரில் பாதுகாப்புப் படையினரால் 18பேர் படுகொலை செய்ததாக மனித உரிமை ஆணைக் குழுவிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கொரோனா வைரஸால் அமெரிக்காவில் மட்டும் 10 இலட்சம் பேர் பாதிப்பு

### 55 ஆயிரம் பேர் பலி

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் பெருந்தொற்று உலகின் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியது. இந்நிலையில் அமெரிக்காவில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் எண்ணிக்கை நேற்று 10 இலட்சத்தைக் கடந்துள்ளதுடன் உயிரிழப்புக்கள் 55 ஆயிரத்தைத் தாண்டியது.

இதேவேளை அமெரிக்காவில் 56 இலட்சத்து 96 ஆயிரத்து 928 பேரிடம் கொரோனா தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 10 இலட்சத்து 10 ஆயிரத்து 356 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. நேற்று முன்தினம் மட்டும் 23 ஆயிரத்து 196 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

அந்நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் ஆயிரத்து 384 பேர் மரணித்ததுடன் மொத்த மரணங்கள் 56 ஆயிரத்து 797 ஆக அதிகரித்தது. அதிக உயிரிழப்புக்கள் பதிவான ஏனைய நாடுகளை விட அமெரிக்காவில் மரணங்கள் இரட்டிப்பாகக் காணப்படுகின்றன.

அமெரிக்காவில் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நியூயோர்க் மாநிலத்தில் கடந்த மூன்று வாரங்களாக ஏற்பட்ட கடும் மனித இழப்புக்கள் குறைந்ததுடன் நேற்று முன்தினம் 348 பேர் மரணித்தனர்.

அத்துடன், குறித்த மாநிலத்தில் 23 ஆயிரத்து 196 பேர் இதுவரை மரணித்ததுடன் அங்கு மட்டும் 2 இலட்சத்து 98 ஆயிரத்து 4 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைவிட, நியூஜெர்ஸி மாநிலத்திலும் உயிரிழப்புக்கள் கணிசமாகக் குறைந்ததுடன் நேற்று முன்தினம் 106 பேரின் மரணங்கள் பதிவாகிய நிலையில் அங்கு 6 ஆயிரத்து 44 பேர் இதுவரை உயிரிழந்தனர்.

இதனைவிட, மசாசுசெட்ஸ் மாநிலத்தில் 104 பேர் நேற்று முன்தினம் மட்டும் மரணித்த நிலையில் அங்கு 3 ஆயிரத்து 3 ஆக மரணங்கள் அதிகரித்தன.

மேலும், மிச்சிகன் மாகாணத்தில் நேற்று முன்தினம் 92 உயிரிழப்புக்கள் ஏற்பட்ட நிலையில் அங்கு மொத்தமாக 3 ஆயிரத்து 407 பேர் இதுவரை மரணித்தனர்.

அத்துடன் ஏனைய மாநிலங்களிலும் நேற்று உயிரிழப்புக்கள் கணிசமாகக் குறைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகள் ஒரே நாளில் முன்னெடுப்பு



### வைத்தியர் அனில் ஜாசிங்க தகவல்

(கொழும்பு)

கொரோனாவுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி மாத்திரம் சுமார் 1,400 மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 16 நிலையங்களில் கொரோனாவுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 22 நாடுகளுக்கு 1200 மருத்துவ பணியாளர்களை அனுப்பியது கியூபா

### உலக நாடுகள் வியப்பு



(ஜெனிவா)

கம்யூனிஸ்ட் நாடான கியூபாவிடம் உதவி கேட்ட 22 நாடுகளுக்கு, 1200 மருத்துவப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அண்மையில் தென்னாபிரிக்காவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க 216 மருத்துவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், உலகிலேயே மக்கள் தொகைக்கு அதிக விகிதமுள்ள மருத்துவர்களை கொண்ட நாடாகத் திகழும் கியூபாவின் இந்தச் செயலைக் கண்டு உலக நாடுகள் வியப்படைந்துள்ளதோடு, கியூபாவை பாராட்டு மழையிலும் நனைத்துள்ளன.

தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கும் சுகாதார பாதுகாப்புக்கும் சமூகம் சார்ந்த சுகாதாரப் பராமரிப்புக்கும் கியூபா புகழ்பெற்ற நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழர் தாயகத்தில் முப்படையினருக்கான பராமரிப்பு நிலையங்கள் அமைப்பதை அரசு நிறுத்த வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசானது கொரோனா தொற்றுக்குள்ளான தாக சந்தேகிக்கப்படும் முப்ப டையினருக்கான தனிமைப் படுத்தல் நிலையங்களை, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயம், சாவகச்சேரி டிறி பேர்க் கல்லூரி உள்ளிட்ட வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் சனச் செறிவு மிக்க பல இடங்களில் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை முப்படைகள் ஏற்க னவே தமிழ்த் தேசத்தின் மீதான இனவழிப்புக் குற்றவாளிகளா கவுள்ளனர். அவர்கள் தமிழர் தாயகத்திலிருந்து முற்றாக வெளி யேற்றப்படுவதே தமிழ் மக்க ளின் பாதுகாப்பிற்கு உகந்தது என்ற அடிப்படையில் அவர்களது வெளியேற்றத்தை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் அதே படைத் தரப்பினர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை தமிழர் தாயகத்தில் வைத்துப் பராமரிப்பதென்பது இங்குள்ள மக் களை மீண்டும் மீண்டும் ஆபத் தினுள் தள்ளி மக்கள் கொத்துக் கொத்தாக உயிரிழக்கக்கூடிய சூழ லையே தோற்றுவிக்கும்.

எனவே முப்படையினருக் கான தனிமைப்படுத்தல் நிலை யங்களை அமைக்கும் செயற் பாட்டினை உட னடியாக நிறுத்த வேண்டும். அர சாங்கத்தின் இச் செயற்பாட்டினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன் மையாகக் கண்டிப் பதுடன், இத னைத் தடுப்பதற்கு மக்களுடன் இணைந்து அரசியல் ரீதியாகச் செயற்படவும் தயங்க மாட்டோம் என்பதனையும் தெரி வித்துக் கொள்கின்றோம் என அக்கட்சி யின் பொதுச் செயலாளர் செ.கஜே ந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ-7)



## பயிற்சி வினாத்தாள்கள் இணையத்தில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும்மொழித் திணைக்களத்தால் நடத்தப்படும் அனைத்துப் பிரிவுகளுக்குமான செயலட்டைகள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வடமாகாண கல்வித்திணைக்கள இணை யத்தில் **(http://www. edudept.np.gov.lk)** வாராவாரம் வெளியிடப்பட்டுக் கொண்டி ருக்கின்றன.

இவற்றினை பயிலுநர்கள் செய்து தபால்மூலம் நிலையத் திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பதில் பணிப்பாளர் பி.என். சுதர்ஷன் ,அறிவித்துள்ளார். (இ)

## தாபரே மாவத்தை தனிமைப்படுத்தல்

(நாரஹேன்பிட்டி )

நாரஹேன்பிட்டி தாபரே மாவ த்தையில் கொரோனா தொற்றா ளர்கள் இருவர் நேற்று முன் தினம் மாலை அடையாளங் காணப்பட்டதாக சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக நேற் றுக் காலை கொழும்பில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரி வித்தார்.

நேற்று முன்தினம்மாத்திரம்60 இற்கும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டதுடன் அவர்களில் பெரும்பாலானோர் கடற்படை வீரர்கள் என அவர் கூறினார்.

மேலும்நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தையில் கொரோனா தொற் றாளர்கள் இருவரும் டொரிங்டன் அறுபதாம் இலக்க தோட்டத்தில் கொழும்பு மாநகர சபை ஊழியர் ஒருவரும் நேற்று முன்தினம் கொரோனா தொற்றுடன் அடை யாளங் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் பணிபுரியும் வாகனச்சாரதி கொழு ம்பு பண்டாரநாயக்க மாவத்தை யில் வசிப்பவர் எனக் கண்ட றியப்பட்டதாக டாக்டர் அனில் ஜாசி ங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## வைரஸ் கொரோனா

❖வைரஸ் கொரோனா வளர்துலகை வாட்டுவதை
வல்லவிறையே வாராமற் கார்

❖சீனாவிற் தோன்றி செகதல மெல்லாம்பரவி
மாழாமல் மாழு துயிர்

❖வல்லர சோவளர்முக நாடென்றோ பேதமின்றி
எங்கும் பரவிடும் நோய்

❖நாட்டு நடப்பும் நடமாடும் எச்செயலும்
கூட்டாக வெங்கும் தடை

❖கோயில் குளமில்லை கொண்டாட்ட மேதுமில்லை
பண்பாட்டில் வந்த தடை

❖சந்தை தெருகள் சனநடமாட்டமிலா
விந்தை உலகமிது ஆனதே

❖கல்வி நிலையில்லை கற்றோர் தொடர்பில்லை
மெல்ல முடங்கும் அறிவு

❖கொரோனாவைக்கூண்டோடு கொன்றொழிக்க விஞ்ஞானம்
தன்னையே அர்ப்பணித்தல் வேண்டும்

❖கொரோனா வைரஸின் கொட்டம் அடங்கினால்
கொண்டாடு மிவ்வுல கேற்று

❖கொரோனா கொடுக்கும் துயரம் கொடித்தனை
வெல்லும் துயர்வேறு இல்லை

❖சட்டத்தை ஏற்றுமக்கள் தாமாய் நடந்து கொண்டால்
நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை

❖சட்டம் தளர்தியதால் தாராளமாய் மக்கள்
ஓடித் திரிகின்றார் வீணில்

❖அரசாங்க சட்டத்தை ஆக்கமுடன் ஏற்று
நடப்பதே மக்கள் கடன்

❖இரவில் சனங்கள் வெளியில் வராததால்
தொல்லை துயரம் இல்லை

❖எல்லோரும் ஒன்றுபட்டு நல்லாய் நடந்து கொண்டால்
வெல்லலாம் நோயை விரைந்து

திருக்குறள் கலாநிதி
பண்டிதர் ஆ.வடிவேலு
தும்பளை, பருத்தித்துறை.

## சாதாரண தர பெறுபேறுகள்

**யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி**

எஸ்.கயன்-9ஏ, பி.மனோஜ்-9ஏ, பி.துசிகரன்-9ஏ, கே.அனுசன்-9ஏ, பி.பவித்திரன்-8ஏபி, ஜெ.ஜெயசங்கர்-8ஏபி, எப்.ஜெயரோசினி-8ஏபி, ஏ.சசிரேகா-8ஏபி, எஸ்.அபினா-8ஏசி, எஸ்.அபிநயன்-7ஏ2பி, வை.கம்சிகா-7ஏ2பி.

**யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி**

கே.கபிலன் -7ஏ2பி

**யா/வேம்படி மகளிர் கல்லூரி**

ஆங்கிலமொழி மூலம்

எஸ்.அபிஷனா-9ஏ, எம். இளநிலா-9ஏ, பி.யாதவி-9ஏ, எஸ்.மதுமிதா-9ஏ, ஆர்.மேரிபெரினா-9ஏ,ரி.மிதுர்னா-9ஏ, எம். நிவேதனா-9ஏ, கே.பூரணி-9ஏ, என்.சருனி-9ஏ, ஏ.சிம்மகி-9ஏ, பி.தமிழினி-9ஏ, எல்.வர்ணிகா-9ஏ, எஸ்.வினுஜா-9ஏ, ரி.அபிநயா-9ஏ, பி.அனுசை-9ஏ, எச்.அபிராமி-9ஏ, எம்.பவனுஜா-9ஏ, எஸ்.காயத்திரி-9ஏ,ஈ.கே.ஜெனுக்ஷி-9ஏ, பி.கஸ்தூரி-9ஏ, ஜி.நியான்சி-9ஏ, வி.சௌமியா-9ஏ, எஸ்.சோவிகா-9ஏ, கே.சிறிநாராயணி-9ஏ, கே.பவனுஷா-8ஏபி, ஏ.கார்த்திகாயினி- 8ஏபி, பி.கோபிகா-8ஏபி, எஸ்.சங்கவி-8ஏபி, எஸ்.சங்கவி-8ஏபி, எஸ். வைஷ்ணவி-8ஏபி, வி.அபிராமி-8ஏபி, எஸ். கயல்விழி-8ஏபி, ரி.ஹரினி-8ஏபி, வை.சாரணி-8ஏபி, ரி.செந்துமி-8ஏபி, கே.தக்ஷி-8ஏபி, பி.தர்மிகா-8ஏபி, ஈ.றமீனா-8ஏசி, ஆர்.தனுஷா-8ஏசி

தமிழ்மொழிமூலம்

யு.கேசாஜினி-9ஏ, வை. நயனி-9ஏ, ஆர்.நிரூபினி-9ஏ,சி.நிருஷா-9ஏ, கே.சஜிதா-9ஏ, ரி.சுபானுஷா-9ஏ, எஸ்.அபிநயா-9ஏ, எஸ்.அஜந்திகா-9ஏ, ஜி.ஹம்ஷாஜினி-9ஏ, ஆர்.கார்த்திகாஜினி-9ஏ, ஜி.கிருஷிகா-9ஏ, எஸ்.மாதமி-9ஏ, கே.பவிதாகினி-9ஏ,ஆர். பிரியங்கா-9ஏ, எஸ்.ராங்கா-9ஏ, எஸ்.சாமந்தி-9ஏ, எஸ்.தெய்வந்தி-9ஏ, ஆர்.யாதவி-9ஏ, கே.ஆரபி-9ஏ, பி.அக்ஷலா-9ஏ, பி.மகிசனா-9ஏ, ரி.நிசந்திகா-9ஏ, எஸ்.சிவதர்ஷினி-9ஏ, எஸ்.ஸ்ரீநிதா-9ஏ, கே.யசோபிகா-9ஏ, வி.அபினதா-9ஏ, எம்.பதுஷா-9ஏ, கே.திவானி-9ஏ, ஜெ.பிரணவி-9ஏ, ஜெ.சாம்பவி-9ஏ, எஸ்.தர்ஷிகா-9ஏ, ஆர்.திஷானா-9ஏ, என்.விஸ்ணுகா-9ஏ, எஸ்.பிருதுவி-8ஏபி, ஆர்.கிருஷாஜினி-8ஏபி, எஸ்.சனோயா-8ஏபி, பி.சுயானி-8ஏபி, எஸ்.சுவேதா-8ஏபி, ஆர்.அன்றியா-8ஏபி, ஜே. ஜானுகா-8ஏபி, பி.கஜானா-8ஏபி, கே. கனிஸ்ரலா-8ஏபி, எம்.கிசோதனா-8ஏபி, ஆர்.பிரணவி-8ஏபி, எஸ். சண்முகப்பிரியா-8ஏபி, கே.ஷஷ்டிகா-8ஏபி, பி.பகிரேகா-8ஏபி, எஸ்.பிரணவி-8ஏபி, எம்.சங்கவி-8ஏபி, ஜே.தர்மிதா-8ஏபி, பி. திஷானி-8ஏபி, ரி.மாதங்கி-8ஏசி, எஸ்.நிலக்சிகா-8ஏசி, ஆர்.சதுர்சிமா-8ஏசி.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

ஆங்கில மொழிமூலம்
கே.ஜனார்த்தனி-9ஏ

தமிழ்மொழிமூலம்

கே.லக்ஷன்-9ஏ, கே.பானுயா-9ஏ, எஸ்.கிருஷாலினி- 9ஏ, வை.சரண்யா- 9ஏ, கே.லக்ஷன்-8ஏபி, வி.மதுஷாந்-8ஏபி, என்.தருண்-8ஏபி, ஈ.திலக்ஷன்-8ஏபி, எஸ்.விஸ்ணுயன்-8ஏபி, ஏ.கம்ஷாநந்தி-8ஏபி, ஏ.கௌதமன்-8ஏசி, எஸ்.வேணுகோபன்-8ஏசி, எஸ்.சுபானுஜா-8ஏசி, எஸ்.அபிராம்-7ஏ2பி, ரி.கிருத்தியன்-7ஏ2பி, என்.லோஜிகன்-7ஏ2பி, ஜி.தனுசன்-7ஏ2பி, ரி.தனுசிகன்-7ஏ2பி, எல்.ஜஸ்மிதா-7ஏ2பி, கே.ஜக்ஷனா-7ஏ2பி, எஸ்.கேஷிகா-7ஏ2பி, கே.கோபிகா-7ஏ2பி, எஸ்.நிலுக்சி-7ஏ2பி, வி.அபீஷன்-7ஏபிசி, கே.மதுஜா-7ஏபிசி, ஜ.ஜன்சிகா-7ஏபிஎஸ்.

**யாழ். மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**

தமிழ்மொழி மூலம்

ப.ஆரணன்- 9ஏ, சி.சிவேதன்-9ஏ, அ.சோபிசன்-9ஏ, நி.கிருத்திகா- 9ஏ, தே.டிதர்சனா- 9ஏ, ஜெ.அபிசனா- 9ஏ, ச.பிரணவி-8ஏபி, கு.வம்சகீர்த்தி-7ஏ2பி, சி.சஜீனா-7ஏபிசி

ஆங்கிலமொழிமூலம்

சி.மேனன்-8ஏபி, ச.சர்மிலன்-7ஏ2பி

**யாழ். வரணி மத்திய கல்லூரி**

எஸ்.வர்ணிதா-8ஏபி, கே.பிரதாப்-8ஏசி, ஆர்.சுவர்க்கா- 8ஏசி

# திட்டமிட்டவாறு பரீட்சைகள் நடைபெறும்

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று நோய் காரணமாக பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தாமதமாகி விட்டன. எனினும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை, தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சை என்பன திட்டமிட்டவாறு ஓகஸ்டில் நடை பெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம்.சித்திரா னந்தா தெரிவித்தார்.

“2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு 3 இலட் சத்து 67 ஆயிரம் மாணவர்கள் இணையம் ஊடாக விண்ணப் பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். அத்துடன், தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 38 ஆயிரம் மாணவர்களிடமிரு ந்து விண்ணப்பங்கள் கிடைத் துள்ளன. இந்தப் பரீட்சைகள் அனைத்தும் உரிய திகதிகளில் நடைபெறும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-114)

# அரசியல் லாபம் தேடும் எந்தவொரு நோக்கமும் ஐ.தே.கவுக்கு இல்லை

## அகிலவிராஜ் விளக்கம்



(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையில், அரசியல் லாபம் தேடும் எந்தவொரு நோக்கமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "கொரோனா வைரஸ் தினமும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் பொருளாதாரம் என்பன முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்தான் அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்த முயற்சி செய்து வருகிறது. நாளுக்கு நாள் மாறுபட்ட கருத்துக்கள் வந்து கொண்டிருப்பதால், மக்களும் குழம்பிப் போயுள்ளார்கள். ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில், பி.சி.ஆர். பரிசோதனையை அதிகரிக்குமாறு தொடர்ச்சியாகக் கேட்டு வருகிறோம்.

இன்று முப்படையினருக்கும் வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளது. யாரேனும் ஒருவருக்கு கொரோனா சந்தேகம் இருந்தால், அதன் அறிகுறிகளை முழுமையாகக் கண்டறிந்து கொள்ள இன்னும் முடியாதுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. எனவே, சந்தேகநபர்களை பரிசோதனை செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இதன் பாரதூரத்தன்மையை உணர்ந்து அரசாங்கம் செயற்பட வேண்டும். நாம் இந்தத் தருணத்தில் எந்தக் காரணம் கொண்டும் அரசியல் லாபம் தேட முற்படமாட்டோம் என்பதை அரசாங்கம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

கொரோனா நிலவரம் தொடர்பான சட்டங்களுக்கு அனுமதியளித்தல், நிதியைப் பெற்றுக் கொடுக்க வழிவகுத்தல், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முற்றாக ஆதரவு வழங்குவதற்காகத் தான் நாடாளுமன்றைக் கூட்டுமாறு வலியுறுத்தி வருகின்றோம்.

தேவையில்லாத கருத்துக்களை சமூகத்தில் பரப்புவதன் ஊடாக, இந்த வைரஸைக் கட்டுப் படுத்த முடியாது. இன்று 5 ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவதில்கூட அரசியல் புகுத்தப்பட்டுள்ளது. இந்த காலத்தில் தேர்தல் தொடர்பாக சிந்தித்தால், நாடே பாரிய சிக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உற்ற நேரத்தில் உதவிய கரங்கள்






(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் பல்வேறு விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 41 உதைபந் தாட்ட விளையாட்டு வீரர்களின் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தினரால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரின் நெறிப்படுத்தலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் வேண்டுகோளுக்கமைய இவ்வாறு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர், செயலாளர் மற்றும் தேசிய இளைஞர் கழக சம்மேளன உதவி அமைப்பாளர், கே.கே.பி.இளைஞர்கழகத் தலைவர், உறுப்பினர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன்
திரு.சுரேஷ் பிரசாந்
அவர்களின் அன்புத்தந்தை

### திருநாவுக்கரசு விஜி



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்

(C-6536)

ஆழ்ந்த துயருடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## இராசிபலன்

29.04.2020
சித்திரை 16, புதன்கிழமை
சஷ்டி முற்பகல் 11.38 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 10.23 மணிவரை
சுபநேரம் 4.28-5.58 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை
சந்திராஷ்டமம்- மூலம்,பூராடம்
சுபமுகூர்த்த தினம்

**மேஷம்**: கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: தொழிலை விருத்தி செய்ய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மிதுனம்**: எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, ஆன்மீக நாட்டம் கூடும்.

**கடகம்**: பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்து செலவுகளும் ஏற்படலாம், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**சிம்மம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத் தேவை களைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும்.

**கன்னி**: திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்**: எதிர்பாராத சம்பவங்கள் இடம் பெறலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்**: குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, குழப்பங்கள் குறைய வழிவகை செய்வீர்கள், பிரயாண பயமுண்டு.

**தனுசு**: குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**மகரம்**: கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்**: பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்**: வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் கிடைக்கும், பெற்றோர் நலனில் அக்கறை கூடும்.

ஆழமாக நேசிப்போர் ஆழமாக வெறுக்கவும் செய்வர்.

# காட்டில் கசிப்பு உற்பத்தி; 720 லீற்றர் கோடா மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கிராம்புவில் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குத் தயாராக வைத்திருந்த 720 லீற்றர் கோடாவை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் மீட்டனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரையும் மதுவரித் திணைக்களத்தினர் தேடி வருகின்றனர்.

கிராம்புவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியசாந்த தலைமையிலான குழுவினர் இவ் மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

தற்போது தென்மராட்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகிறது. கடந்த வாரம் மறவன்புலோ பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருட்களைச் சாவகச்சேரி பொலிஸார் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# தந்தை செல்வாவின் 43 வது நினைவு தினம் அனுஷ்டிப்பு







(யாழ்ப்பாணம்)


இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரான தந்தை செல்வாவின் 43 ஆவது நினைவு தினம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

யாழிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில். இலங் கைத் தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசா தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக குறித்த நிகழ்வை நடத்த ஆரம்பத்தில் பொலிஸார் அனுமதித்திருக்கவில்லை. பின்னர் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து அஞ்சலி செலுத்துவதற்கு அனு மதிக்கப்பட்டது. இதற்கமைய ஒவ்வொருவராகச்சென்று தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வீடு முற்றாகத் தீக்கிரை



(பொற்பதி)

வடமராட்சிக் கிழக்கு ஆழியவளை பகுதியில் வீடு ஒன்று கடந்த 25 ஆம் திகதி முற்றாகத் தீக்கிரையானது.

இந்த தீ விபத்து தொடர்பில் தெரிய வருவதாவது, பழனிநாதன் பிரகாஸ் மற்றும் அவரது மனைவி, மகள் ஆகியோர் குறித்த வீட்டில் வாழ்ந்து வந்துள்ள நிலையில் பிரகாஸ் என்ற வீட்டு உரிமையாளர் மிகுந்த மதுப் பிரியராகவும் காணப்பட்டதால் குடும்பத்தில் அடிக்கடி பிளவுகள் ஏற்பட்டு வருவது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

குறித்த சம்பவ தினத்தன்று பிற்பகல் வீட்டு உரிமையாளர் அதிக மது போதையில் சென்று வீட்டிற்கு தீவைத்துள்ளார்.

எரிந்த வீட்டின் நெருப்பு காற்றில் பறந்து அருகில் உள்ள இன்னொரு வீட்டின் கூரையில் விழுந்ததில் அந்தக் கூரையும் பகுதியளவில் எரிந்தது. இதனை அயலவர்கள் உடனடியாக அணைத்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் அயல் வீட்டு உரிமையாளரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2-64)

# விமானப்படை வீரருக்கும் கொரோனாத் தொற்று உறுதி கட்டுநாயக்க தளத்தின் ஒரு பகுதி தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையிலும் கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் கண்டறியப்பட்டார்.

விமானப்படையின் இசை வாத்தியப் பிரிவில் சேவையாற்றிய கோப்ரல் ஒருவருக்கே இந்தத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், அவர் அங்கொடை தேசிய தொற்று நோய்த் தடுப்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டார். அவருடன் தொடர்புகளிலிருந்த 62 விமானப்படை முகாமின் ஒரு பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கொரோனாத் தொற்று உறுதியான விமானப்படை வீரர், ஏற்கனவே விமானப்படையின் கண்காணிப்பின் கீழ் இருந்தவர். வெலிசர கடற்படை வீரர்களுக்கு தொற்று ஏற்பட்டதையடுத்து அடிக்கடி வெளியே சென்று வந்த அவர் கண்டறியப்பட்டிருந்தார் என விமானப்படையினர் தெரிவித்தனர்.

அவருக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து உறுதியான சான்றுகள் இல்லாவிட்டாலும் அது குறித்து தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் இந்த வீரர் கலந்து கொண்டிருந்தார். அவருடன் இரு கடற்படை வீரர்களும் மற்றொரு விமானப்படையின் பெண் வீராங்கனை ஒருவரும் பங்கேற்றிருந்தனர். அங்கு வைத்து இவருக்கு தொற்று ஏற்பட்டதா? என சந்தேகம் எழுந்தது. எனினும் அந்நிகழ்ச்சியில் பங்கேற்ற கடற்படையினர் இருவருக்கும், விமானப்படை வீராங்கனைக்கும் கொரோனா இல்லை என பரிசோதனைகளில் தெரிய வந்தது.

அதேபோல் அண்மையில், கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட தொடர்மாடிக் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில் இசைக் கச்சேரிகள் நடத்தப்பட்டன. இதன் போது ஏதும் தொற்று ஏற்பட்டதா? என்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த விடயத்தில் அச்சமடைய வேண்டாம் எனவும், குறித்த வீரருடன் தொடர்புடைய அனைவரும் உரிய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு கண்காணிக்கப்படுவதாகவும் இந்நிலையில் விடுமுறையை இரத்துச் செய்து முகாம்களுக்கு அழைக்கப்பட்ட விமானப்படை வீரர்களையும் 14 நாட்கள் கண்காணிப்பில் வைத்து. அதன் பின்னர் கடமைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவசியமான மருத்துவ பரிசோதனைகளும் அவர்கள் குறித்து முன்னெடுக்கப்படும் எனவும் விமானப்படை போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் படையினர் தெரிவித்தனர். (இ-7)

# மோசமான அவலங்களுக்குள் சிக்குண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுவிக்குக

## ஜனாதிபதி,பிரதமரிடம் ஆனந்தன் அவசர கோரிக்கை



(வவுனியா)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கொரோனா வைரஸ் பரவலால் பேராபத்தில் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன், அரசியல் கைதிகள் குறித்து தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கட்சி பேதமின்றி ஒன்றிணையுமாறும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் கொரோனா வைரஸின் பரவலால் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக, மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 பேர் வரையிலான தமிழ் அரசியல் கைதிகள் கொரோனா வைரஸ் ஆபத்துக்குள் சிக்கியுள்ளனர். இந்தச் சிறைச்சாலையிலுள்ள சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று குறித்த சந்தேகம் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரையில் தண்டனைக்கும் அதிகமான காலத்தை சிறைச்சாலைகளிலேயே கழித்து விட்டனர். அவர்களின் விடுதலையை மாறிமாறி வரும் ஆட்சியாளர்கள் அரசியலுக்காகவே பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது ஆபத்தானதொரு அவசர நிலைமை நாட்டில் நிலவுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆகக்குறைந்தது அவர்களுக்கு தற்காலிக பிணை அனுமதியுடன் சொந்த இருப்பிடங்களுக்கு செல்வதற்காகவாவது அனுமதியளிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர் விசேட கவனம் எடுக்க வேண்டும். மோசமான அவலங்களுக் குள் சிக்குண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமைகளை உணர்ந்து உடன் நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகின்றது. இந்த விடயத்தில் எதிர்த்தரப்புக்கள் அனைத்தும் கூட்டிணைந்து செயற்பட வேண்டியதும் அவசியமாகின்றது என அவர்மேலும்தெரிவித்தார் (இ-299)

# பங்களாதேஷில் சிக்கித்தவித்த 73 மாணவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

பங்களாதேஷில் சிக்கித் தவித்த 73 இலங்கை மாணவர்கள் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம், நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலிருந்து மாணவர்களை ஏற்றிக் கொண்டு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த மாணவர்கள் விமான நிலையத்தில் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு கொவிட் -19 அறிகுறிகள் உள்ளதா? என்று பரிசோதிக்கப்பட்டனர். பின்னர் அந்த மாணவர்களை பேருந்துகளில் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். (இ-7)

# உலகளவில் கொரோனா வைரஸால் 2 இலட்சத்து 11 ஆயிரம் பேர் பலி

## 30 இலட்சத்து 65 ஆயிரம் பேர் பாதிப்பு



(ஜெனீவா)

மனிதப்பேரழிவை ஏற்படுத்தி வரும் கொடிய கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால் உலகளவில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 700 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் நேற்றுக் காலை வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் உலகளவில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பதை உறுதிப்படுத்தியவர்களின் எண்ணிக்கை மூன்று மில்லியனுக்கும் அதிகமாக உயர்ந்தது.

இதன்படி உலகளவில் 30 இலட்சத்து 64 ஆயிரத்து 894 பேர் பாதிக்கப்பட்டனர்.

மேலும் கொடிய கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த 9 இலட்சத்து 22 ஆயிரத்து 581 பேர் பூரண குணமடைந்தனர். (இ-7)

# இந்தியாவில் கொரோனா தொற்றால் 30 ஆயிரத்தைத் தாண்டியது பாதிப்பு!

## 934 பேர் பலி!



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியது. இதேவேளை கொரோனாவால் 934 பேர் பலியாகினர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வைரஸ் அதிவேகமாக பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 11 ஆக அதிகரித்தது.

நேற்றுக்காலை 9 மணியளவில் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 1543 பேருக்கு நோய்த்தொற்று கண்டறியப்பட்டது. 62 பேர் மரணமடைந்தனர். இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 934 ஆக உயர்ந்தது. 6 ஆயிரத்து 869 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

இந்தியாவில் அதிகபட்சமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் 8 ஆயிரத்து 590 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 369 பேர் உயிரிழந்தனர்.

குஜராத்தில் 3548 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 162 பேர் உயிரிழந்தனர். தலைநகர் டில்லியில் 3108 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 54 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வன். திருமுரளி பாணுசன்

6ஏ, 2பி, 1சி தேர்ச்சிபெற்று
கிளி.சிவநகர்.அ.த.க.பாடசாலைக்கும்
கற்பித்த ஆசிரியர்களுக்கும்
பெற்றோராகிய எமக்கும் பெருமை
தேடித்தந்த எமது புதல்வன்
செல்வன்.திருமுரளி பாணுசன்
மென்மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.
கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும்
எமது நன்றிகள்.

இல.37/1 சிவநகர்,
உருத்திரபுரம்.

குடும்பத்தினர்

(C-9342)


# இலங்கைக்கு ஒரு தொகுதி மருத்துவ கையுறைகளை வழங்கியது இந்தியா

(கொழும்பு)

கொவிட்-19 நோயினை எதிர்கொள்வதற்காக இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளின் தொடர்ச்சியாக ஒரு தொகுதி மருத்துவ கையுறைகள் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் இலங்கை அரசாங்கத்திடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

முன்னதாக இம்மாதம் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் 13 தொன்கள் உயிர்காக்கும் அத்தியாவசிய பொருட்கள் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

இது தொடர்பில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்ததாவது.

மார்ச் 15 ஆம் திகதியன்று இடம்பெற்ற சார்க் தலைவர்களின் காணொலி மாநாட்டின் போது அயல் நாடுகளின் அவசர உதவிப் பணியாளர்களுக்கு கொவிட்-19ஐ கையாள்வதற்கான முயற்சிகளுக்கு உதவுவதற்காக இந்தியா இணைய மூலமான பயிற்சிகளை வழங்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இந்திய வெளியுறவு அமைச்சு கொவிட்-19 முகாமைத்துவ உத்திகள் மற்றும் தொடர்புடைய அம்சங்கள் குறித்து சுகாதார நிபுணர்களுக்காக e-ITEC குறுகிய பயிற்சிகளை இணையம் மூலமாக நடத்துகிறது.

அதன் முதலாவது இணைய அமர்வு (Webinar) சுகாதார பராமரிப்பு நிபுணர்களுக்கான கொவிட்-19 தடுப்பு மற்றும் முகாமைத்துவ வழிகாட்டுதல்கள் என்ற தொனிப்பொருளில் ஏப்ரல் 17 முதல் 21 வரை ராய்ப்பூரிலுள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

அதில் இலங்கை சுகாதார அமைச்சின் 11 மருத்துவ அதிகாரிகள் பங்கேற்றனர். இரண்டாவது இணையவழி ITEC பயிற்சி கொவிட்-19ஐ கையாள்வதில் இந்தியாவின் அனுபவம் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்ற தலைப்பில் சண்டிகரிலுள்ள மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தால் நேற்று முன்தினம் முதல் 2020 மே 1 வரை நடத்தப்படுகிறது.



எதிர்வரும் நாட்களிலும் இவ்வாறான பயிற்சிகள் நடைபெறவுள்ளன. இந்த நெருக்கடியான காலப்பகுதியில் தனது வளங்களையும் நிபுணத்துவத்தையும் அயல் நாடுகளுடனும் நட்பு நாடுகளுடனும் தொடர்ந்து பகிர்ந்து கொள்வதற்கு இந்தியா உறுதியாகவுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# பிள்ளைகளின் உயிரைப் பறித்த தந்தை

## லண்டனில் பயங்கரம்

(லண்டன்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் லண்டனில் தனது இரு பிள்ளைகளையும். கொலை செய்து விட்டு தானும் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

யாழ்ப்பாணம் -வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நிதி என அழைக்கப்படும் நிதின்குமார் என்பவரே. தனது இரு பிள்ளைகளையும். கொலை செய்து விட்டு தானும் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தனது இரண்டு பிள்ளைகளையும் கூரான ஆயுதத்தால் தாக்கிக் கொன்ற இவர் தானும் உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு வயது பெண் குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் மூன்று வயது மகன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

நிதின்குமாரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில் ஆபத்து கட்டத்தைத் தாண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கர்ப்பிணிப் பெண்களுக்கு முக்கிய அறிவிப்பு



(கொழும்பு)

கர்ப்பிணிப்பெண்கள் பின்வரும் அபாய அறிகுறிகள் ஏற்படுமாயின் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க அறிவுறுத்தினார்.

அந்தவகையில் காய்ச்சல், இரத்தப்போக்கு, கடுமையான தலைவலி, சுவாசிப்பதில் சிரமம், பார்வைக் குறைபாடு, வலிப்பு (Fits), நெஞ்சு/வயிற்று வலி, சிசுவின் அசைவு குறைதல், உடலின் வீக்கம் அல்லது வேறு ஏதேனும் கடுமையான அசௌகரியம் இருந்தால் உடனடியாக வைத்தியசாலையை நாட வேண்டும்.

மேலும் தரமான சேவையை வழங்கவும் வைத்தியசாலைகளில் நெரிசலைக் குறைக்கவும் (கிளினிக்) தொடர் மருத்துவ பரிசோதனைக்கு செல்லும் கர்ப்பிணிப்பெண்கள் முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார். (இ-7)

# சட்டத்தரணி, தற்கொலைதாரிகள் இணைந்து மத்ராஸாக்களை நடத்தினர்-சி.ஐ.டி.தகவல்

(கொழும்பு)

அண்மையில் கைதான சட்டத்தரணியும் உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைதாரிகள் இருவரும் இணைந்து நடத்தி வந்த இரண்டு மத்ராஸாக்களைக் கண்டறிந்துள்ளதாக சி.ஐ.டியினர் தெரிவித்தனர்.

தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றின் மூலம் இவை நடத்திச் செல்லப்பட்டதாகவும் இந்தத் தொண்டு நிறுவனத்தின் தலைவராக கைதான சட்டத்தரணியே இருந்துள்ளதாகவும் சி.ஐ.டியினர் தெரிவித்தனர்.

இந்த மத்ராஸாக்கள் புத்தளம் மதுரங்குளி, வண்ணாத்திவில்லு பகுதிகளில் அமைந்துள்ளதாகவும் சி.ஐ.டியின் சிறப்பு விசாரணைக்குழு கடந்த வாரம் இந்த மத்ராஸாக்களை ஆய்வு செய்ததாகவும் சி.ஐ.டியினர் தெரிவித்தனர். மதுரங்குளி மத்ராஸாவின் ஒரு முனையில் சர்வதேச பாடசாலையொன்று அமைந்துள்ளதாகவும் இந்தக் காணி, பாடசாலை தொடர்பில் விசாரணை நடந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

மற்றைய மத்ராஸா முஸ்லிம்கள் வாழும் பகுதியில் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டது. மத்ராஸாவின் நுழைவாயிலில் பள்ளிவாசலொன்று அமைந்துள்ளது. அங்கு அனுமதி பெறாமல் மத்ராஸா வளாகத்திற்குள் யாரும் நுழைய முடியாத விதமான பாதுகாப்பு ஏற்பாடு இருந்ததையும் அவதானித்ததாக சி.ஐ.டியினர் தெரிவித்தனர்.

அநாதைக் குழந்தைகளுக்கென நடத்தப்பட்ட இந்த மத்ராஸாவில் இதுவரை 34 பேர் கல்வி கற்றுள்ளதாக சி.ஐ.டி.சிறப்புக் குழுவினர் தெரிவித்தனர். (இ-7)

# கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 866 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புக்கள் மற்றும் நேரடி வைப்புக்களுடன் கொவிட்-19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி 866 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. மிஹிந்தலை ரஜமகா விகாராதிபதி சங்கைக்குரிய வலகா ஹெங்குனுவெள தம்மரதனதேரர் ஒரு மில்லியன் ரூபாவை இந்த நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தார்.

களனி ரஜமகா விகாரை ஒரு மில்லியன் ரூபாய், கதிர்காமம் ரஜமகாவிகாரை ஒரு மில்லியன் ரூபாய், பம்பலப்பிட்டிய ஸ்ரீ வஜிராராம சங்கம் 96 ஆயிரம் ரூபாய், சனச அபிவிருத்தி வங்கி 5 மில்லியன் ரூபாய், வரையறுக்கப்பட்ட சனச காப்புறுதி நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாய், அவுஸ்திரேலியா நிவ் சவுத் வேல்ஸிலுள்ள ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர்கள் 5 மில்லியன் ரூபாய், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் 1.1 மில்லியன் ரூபாய், ஏ.ட.ஆர்.சீ. லைனட் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய், மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரணங்கள் நிறுவனம் ஆறு இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய கொவிட் 19 சுகாதார,சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு உள்நாட்டு-வெளிநாட்டு எந்தவொரு அன்பளிப்புக்களை அல்லது நேரடி வைப்புக்களைச் செய்ய முடியும். சட்ட பூர்வமான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்புக்கள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களிலிருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியை வைப்பிலிட முடியும்.

011 235 4479/011 235 4354 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) கே.பீ. எகொடவெலேவை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என அந்த நிதியத்தினர் மேலும் அறிவித்துள்ளனர். (இ-7)

# கொவிட்-19 ஒழிப்புச் செயற்பாடுகளுக்காக மைக்ரோ கார் நிறுவனம் பேருந்து அன்பளிப்பு



(கொழும்பு)

கொவிட்-19 ஒழிப்புச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காக மைக்ரோ கார் லிமிட்டற் நிறுவனம் 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான பேருந்தை அன்பளிப்புச் செய்தது.

இந்தப் பேருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில்வைத்து மைக்ரோ கார் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி லோரன்ஸ் பெரேராவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர். (இ-7)

# அபராதம் செலுத்த சலுகைக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் காரணமாக தபாலகங்கள் திறக்கப்படாததால், செலுத்த முடியாமல் போன மோட்டார் வாகனங்களுக்கான அபராதப் பத்திரங்களுக்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கான சலுகைக் காலம் நீடிக்கப்பட்டது. பொலிஸ்மா அதிபர், நிதி அமைச்சின் செயலாளரின் இணக்கப்பாட்டுடன் இந்தச் சலுகைக் காலம் நீடிக்கப்பட்டதாக தபால் மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 02 ஆம் திகதி வரை இந்தச் சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மார்ச் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் வழங்கப்பட்ட அபராதப் பத்திரங்களுக்கு மாத்திரமே மேலதிக கட்டணங்கள் இல்லாமல் தபால் நிலையங்களில் அபராதப் பணத்தைச் செலுத்துவதற்கு சலுகை வழங்கப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் 16 தொடக்கம் 29 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட அபராதப் பணப் பத்திரங்களுக்கு மேலதிக கட்டணத்துடன் அவற்றைச் செலுத்த மே 2 ஆம் திகதி வரை சலுகைக்காலம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கல்வியில் கவனம்

படிக்கின்ற பிள்ளைகளுக்கு, படிப்பைத் தவிர வேறு எங்கேயும் கவனம் போகக் கூடாது! அப்பொழுது தான் படிப்பு நன்றாக வரும். இல்லை என்றால் வேறு ஏதாவது தான் வரும். குருகுலத்திலெல்லாம் ஒவ்வொருத்தர் எப்படியெல்லாம் படித்திருக்கின்றார்கள் தெரியுமா?

யாக்ஞவல்கியரின் குருகுலத்திலே ஜனகர் படித்தார், ஜனகர் யார்? நாட்டுக்கு ராஜா! "அது தான் ராஜா ஆகிவிட்டோமே! இனிமேல் நமக்கு எதற்காகப் படிப்பு?" என்று அவர் நினைக்கவில்லை. கல்விக்கு எல்லை ஏது? யாக்ஞவல்கியர் தினமும் ஜனகர் வந்த பின்பு தான் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கம். இது சில மாணவர்களுக்கு பிடிக்கவில்லை. என்ன இது...?

ஜனகர் ஒரு மன்னர் என்பதாலே தான் இவர் அவருக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கின்றார்! என்று மனதிற்குள்ளே நினைத்தார்கள். இவர்கள் மனதிற்குள்ளே நினைக்கின்றது குருவுக்குத் தெரியும். ஏனென்றால் அவருக்கு யோக சக்தியுண்டு. குரு கவலைப்பட்டார். தன்னைப் பற்றி இப்படி நினைக்கிறார்களே என்பதற்காக இல்லை. அவர்களுடைய கல்வியின் பலனை இப்படிப்பட்ட நினைப்புகள் மூலமாக இழந்து விடுகிறார்களே என்பது தான் கவலை அவருக்கு. ஒரு நாள் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அவசர அவசரமாக சில பேர் ஓடி வந்தார்கள்.

ஐயா! பட்டணம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றது! என்று சொன்னார்கள். இதனைக் கேட்டவுடனேயே துள்ளி எழுந்து கொண்டார்கள் சில மாணவர்கள். குருவிடம் கூட சொல்லாமல் கொள்ளாமல் வெளியே ஓடினார்கள். அங்கே கொடியிலே துவைத்துக் காயப் போட்டிருந்த அவர்களுடைய துணி மணிகளை எடுத்து பத்திரப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். இவர்களைப் பார்த்துவிட்டு இன்னும் சிலபேரும் எழுந்து ஓடினார்கள். அடுத்தபடியாக இன்னும் சில பேர் சத்தம் போட்டுக் கொண்டே ஓடிவந்தார்கள்!

"அரசே அரண்மனையிலே நெருப்பு சூழ்ந்து விட்டது. அங்கே உள்ளவர்கள் எல்லோரும் தெருவிலே இறங்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். சிலபேர் நெருப்பிலே கூட மாட்டிக் கொண்டார்கள் என்றார்கள். எல்லோரும் பதறினார்கள். ஆனால் ஜனகன் மட்டும் கொஞ்சம் கூட சலனம் அடையாமல் குரு சொல்லிக் கொடுக்கின்ற பாடத்திலே மூழ்கி இருந்தார். முனிவரே ஜனகரைப் பார்த்து உன்னுடைய அரண்மனையிலேயும் தீப்பிடித்து விட்டதாம்! என்றார். அந்த வார்த்தைகள் கூட ஜனகர் காதிலே ஏறவில்லையாம்! அந்த அளவிற்கு பாடத்தோட அவர் ஒன்றித்துப் போயிருக்கின்றார். இது ஒரு உதாரணம்!

ஒரு குருகுலத்திலே ஒரு மாணவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆசிரியருடைய மனைவி அவருக்கு சோறு பரிமாறிக் கொண்டிருந்தார்! சோறு வைத்தார். கறியெல்லாம் வைத்தார். அடுத்தபடியாக நெய் ஊற்றுகின்றேன் என்று சொல்லி ஊற்றினார். சாப்பிட ஆரம்பித்த மாணவன் முகம் ஒரு மாதிரியாக ஆகியது. "என்னங்க இது... நெய் ஊற்றுறேன் என்று சொல்லிக்கொண்டு வேப்பெண்ணெயை ஊற்றுகின்றீர்களே! ஏதாவது ஞாபகப் பிசகாகி விட்டதா?" என்று கேட்டான். அதற்கு ஆசிரியர் விபரம் சொன்னார்.

"அப்படி இல்லையப்பா! நீ எப்பொழுது வந்து சேர்ந்தாயோ அப்போதிலிருந்து அரண்மனையில் உனக்கு வேப்பெண்ணெ தான் ஊற்றிக் கொண்டிருக்கின்றோம். உன்னுடைய கவனம் எல்லாம் படிப்பிலேயே இருந்ததால் உன்னுடைய நாக்கு ருசி தேடவில்லை. ஆனால் இன்றைக்கு உன்னுடைய கவனம் மாறி விட்டது!

அதனாலே தான் இது வேப்பெண்ணெய் என்பது உனக்கு ஞாபகம் வந்துவிட்டது. உன்னுடைய நாக்கு ருசிபட ஆரம்பித்து விட்டது. இனிமேல் நீ இந்த குருகுலத்திலே இருக்க வேண்டாம். இதைவிட்டுவிட்டு போய்விடுவது தான் நல்லது என்றார்.

கல்வி என்றால் அதிலே எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இதெல்லாம் உதாரணங்கள், நீங்கள் உடனே "என்ன சேர் இது... நெருப்புப்பிடித்துக் கொண்டது என்றால் கூட அதைக் கவனிக்காமல் விட்டுவிட வேண்டுமா? வேப்பெண்ணெயை நெய் என்று ஊற்றினால் கூட சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டுமா?" என்று கேட்கக் கூடாது. கல்வியிலே கவனம் எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்வதற்கு இதெல்லாம் உதாரணம். அப்படி என்று எடுத்துக்கொள்ள வேண்டும் அவ்வளவு தான்.

இந்தக் காலத்துப் பையன் ஒருவனிடம் பேசிக் கொண்டிருந்தேன். இந்தக் கதைகளையெல்லாம் அவனிடமும் சொல்லிவிட்டுக் கேட்டேன் "ஏனப்பா நீ வீட்டிலே உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கின்ற பொழுது ஓடி வந்து உங்கள் பள்ளிக்கூடம் தீப்பிடித்துவிட்டது என்று சொல்கிறான்... நீ உடனே என்ன செய்வாய்"? என்று கேட்டேன்.

"நானும் ஜனகன் மாதிரித்தான் சேர்! படித்துக் கொண்டு தான் இருப்பேன். எழுந்து சென்று தீயை அணைக்கின்ற முயற்சி செய்ய மாட்டேன்.!"

"ஏன்டா அப்படி!" என்றேன். "பள்ளிக்கூடம் எரிந்தால் தானே சேர் பசங்களுக்கெல்லாம் லீவு கிடைக்கும் !" அப்படி என்றான்.

# புத்தாண்டு இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2021



சார்வரி வருடத்தொடக்கத்தில், உங்கள் இராசிநாதன் குரு பகவான், இலாப ஸ்தானத்தில் நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். அவரோடு உச்சம்பெற்ற செவ்வாயும் இணைந்துள்ளார். செவ்வாய், சூரியன் உச்சம் பெற்றும், புதன் நீச்சம் பெற்றும், சுக்கிரன் சொந்த வீட்டில் பலம் பெற்றும் இந்த ஆண்டு தொடங்குகிறது. எல்லா வழிகளிலும் உங்களுக்கு நன்மை கிடைக்கும் ஆண்டாக இது அமையப்போகிறது.

**ராகு-கேது பெயர்ச்சி**

1.9.2020 அன்று உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திற்கு ராகுவும் 9 ஆம் இடத்திற்கு கேதுவும் பெயர்ச் சியாகிறார்கள். ராகுவால், சென்ற ஆண்டில் முடிவடையாத சில காரியங்கள் பெயர்ச்சிக்கு பிறகு துரிதமாக நடைபெறும். எடுத்த காரியத்தை துணிச்சலோடு செய்து முடித்து, எல்லாக் காரியங்களிலும் வெற்றி காணப்போகிறீர்கள். அடிப்படை வசதிகள் பெருகும். ஆக்கபூர்வமாக சிந்திப்பீர்கள். கேதுவால், ஞானம் விருத்தியாகும். ஆற்றல் பெருகும். தந்தை வழியில் நன்மை கிடைக்கும்.

**குருப்பெயர்ச்சி**

15.11.2020 அன்று குரு பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகி செல்கிறார். அது குருவுக்கு நீச்ச வீடு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறும் போது, சில நல்ல பலன்களை அள்ளி வழங்கும். அதேநேரம் ஆரோக்கிய தொல்லை அடிக்கடி வரலாம். தொழிலில் புதிய பணியாளர்களை சேர்க்க முன்வருவீர்கள். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு இது ஒரு பொற்காலம். திட்ட மிட்ட காரியங்களை திட்டமிட்ட படியே செய்து முடிப்பீர்கள். பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கங் கள் விலகும்.

**சனிப்பெயர்ச்சி**

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்கப்படி சனி பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். எனவே இலாப ஸ்தானம் பலம்பெறுகிறது. தொழிலில் இலாபம் கிடைக்கும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரப்போகிறது. அரசு வழியிலும் நன்மை கிடைக்கும். நவநாகரிக பொருட்களை வாங்க நினைப்பீர்கள்.

சகோதரர்களின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற கொள்கை பிடிப்புடன் செயற்படுவீர்கள். சனிப்பெயர்ச்சிக்கு பிறகு ஒவ்வொரு சனிக்கிழமையும் சனிபக வானை வழிபடுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குரு வக்கிரமும் அதிசாரமும்**




13.5.2020 முதல் 7.7.2020 வரை குருபகவான் அதிசாரமாகவும் வக்கிரமாகவும் சஞ்சரிக்கிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குருவக்கிர இயக்கத் தில் இருக்கின்றார். அதேநேரத்தில் சனியும் வக்கிர கதியில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு அதிசாரத்தில் செல்கிறார். இதன் விளைவாக விரயங்கள் ஏற்படலாம். வீடு மாற்றங்களும், விருப்பமில்லாத இடத்திற்கு உத்தி யோக மாற்றங்களும் ஏற்படும். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும் மாற்றப் படும். வீண் பழிகளுக்கும் ஆளாக நேரிடும்.

**வழிபாடு**

சஷ்டி திதியில் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவதோடு, தென்முக கடவுளையும் வழிபட்டு வந்தால் நன்மைகள் உண்டாகும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

ஆண்டு தொடக்கத்தில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். வருமானம் திருப்தி தரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்றார், உறவி னர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். வீண் பிரச் சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். விலகி சென்ற சகோதரர்கள் விரும்பி வந்திணைவர். பிள்ளைகளின் கல்யாண முயற்சிகைகூடும்.

(முற்றும்)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2023 facebook

**ரட்ணம்**




**பிரதாயினி**




**ராங்கசாமி**




**வசுந்தலா**




**திலகன்**




**பாண்டியன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனிமைப்படுத்தல், இடைத்தங்கல் நிலையங்கள் தொடர்பில் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்

## முல்லை.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் இடைத்தங்கல் நிலையங்களுக்கும் இடையேயான வித்தியாசங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில், தற்போது தொற்றுள்ளவருடன் தொடர்பு பட்டவர்கள் மற்றும் தொற்று இருக்க அதிக வாய்ப்புள்ளவர்கள் கவனிக்கப்படுகின்றார்கள்.

இடைத்தங்கல் நிலையங்களில் விடுமுறையின் பின்னர் வருபவர்களுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள் தென்படுகிறதா? என அவதானிப்பதற்காகத் தங்க வைக்கப்படுவர்.




எனவே இனிவரும் நாட்களில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இடைத்தங்கல் அவதானிப்பு நிலையங்கள் தேவைப்படும். ஏன்? சில சந்தர்ப்பங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இது தேவைப்படலாம். இதற்காகப் பாடசாலைகள் மட்டுமல்ல உங்கள் அருகில் உள்ள வீடுகளும் பயன்படுத்தப்படும்.

நீங்கள் எப்பொழுதும் சமூக மற்றும் பௌதீக இடைவெளிகளைப் பேணுவதுடன் சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் முறையாகப் பின்பற்றினால் நோய்த் தாக்கத்தில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (9)

# துப்பாக்கி வைத்திருந்த தந்தை, மகன் கைது!

(மன்னார்)

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குஞ்சுக்குளம் கிராமத்தில் சட்ட விரோத உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகள் இரண்டுடன் தந்தை, மகன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் மடு பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது குறித்த சட்ட விரோத உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் 25 வயது மகனும் 50 வயதுடைய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மடு பொலிஸாரின் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

குறித்த சுற்றி வளைப்பு நடவடிக்கையில் மடு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிரோஷன் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# கிளிநொச்சியில் அரிசி தட்டுப்பாடு

## களஞ்சியப்படுத்தப்படாமல் வெளிமாவட்டங்களுக்கு நெல்லை ஏற்றுமதி செய்ததால் இந்த நிலை என பல தரப்புக்கள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுத்தேவைக்கான நெல் களஞ்சியப்படுத்தப்படாத நிலையில் வெளிமாவட்டங்களுக்கு நெல்லை ஏற்றுமதி செய்தமையே தற்போதைய அரிசித் தட்டுப்பாட்டிற்குக் காரணமென பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் அதிக நெல்லை உற்பத்தி செய்யும் விவசாய மாவட்டமாக காணப்படுகின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் அரிசிக்கான தட்டுப்பாடு தற்போது காணப்படுகின்றது.

அரசாங்கத்தினால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ள போதும் வர்த்தக நிலையங்களில் மறைமுகமாக அதிகூடிய விலைகளில் அரிசி விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதாவது, தற்போதைய அசாதாரண சூழ்நிலைகளால் தொழில் வாய்ப்புக்களை இழந்த நிலையில் காணப்படுகின்ற தினக்கூலியை வருமானமாகக்கொண்ட குடும்பங்கள் முழுமையாகவே பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இது தொடர்பாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் உணவுத்தேவைக்காக சிவப்பு நெல் அரிசியே பயன்படுத்தப்படுகின்றது.

ஆனால் கடந்த போகத்தில் சிவப்பு அரிசிக்கான விலைகளில் தளம்பல் நிலை காணப்பட்டதால் வெள்ளை நெல்லே கூடுதலாக விளைவிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக 1700 மெற்றிக்தொன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இதைவிட, கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தில் அமைந்துள்ள தானியக்களஞ்சியப்படுத்தல் நிலையத்தில் 480 மெற்றிக்தொன் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விவசாயிகளும் தமது உணவுத்தேவைக்கான நெல்லை வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன், அரிசிக்கான தட்டுப்பாடு என்பது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு வரையான பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், தனியார் அரிசியாலைகள், பத்திற்கும் மேற்பட்ட நெற்களஞ்சியங்கள் உள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதுள்ள சனத்தொகையின் அடிப்படையில் வருடம் ஒன்றிற்கு 22 ஆயிரத்து 400 மெற்றிக்தொன் நெல் உணவுக்கு தேவையான நிலையில் 2180 மெற்றிக்தொன் நெல் இவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு இல்லை பப்பாசி செய்கையாளர்கள் பெரும் பாதிப்பு

(நெளுக்குளம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாக வவுனியா மாவட்ட பப்பாசி செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி, தாலிக்குளம், பறங்கிஆறு, கணேசபுரம், மயிலங்குளம், செட்டிகுளம் போன்ற பகுதிகளில் பெரியளவில் பப்பாசிச் செய்கையினை விவசாயிகள் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊரடங்குச் சட்டம் காரணமாக அவற்றை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் மரங்களிலே கனிந்து பழுதடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வெளி மாவட்டங்களில் இருந்து வவுனியாவிற்கு வியாபாரிகள் வருகை தராமையினாலும் அதனை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன்.

ஒரு பப்பாசிப் பழம் 70 முதல் 80 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்ததாக தெரிவிக்கும் அவர்கள் தற்போது 10 ரூபாய்க்குக் கூட அதனை விற்க முடியாத நிலையில் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மரத்திலேயே கனிந்து பழுதடையும் பழங்களை இலவசமாகவும், கால்நடைகளிற்கும் கொடுத்து வருவதுடன் தமது உற்பத்திப் பொருட்களுக்கு சரியான சந்தைவாய்ப்பை அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (9-299)




# உரக்கொள்வனவில் சிக்கல் கிளி. விவசாயிகள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தமக்குத் தேவையான உரவகைகள் மற்றும் களை நாசினிகளை பெற்றுக் கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதுடன் அதிகூடிய விலைகளில் இவற்றைப் பெற்றுக்கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான மானிய உரம் கமநலசேவைநிலையங்களூடாக வழங்கப்பட்டு வருகின்ற போதும் குறிப்பிட்ட சில பகுதி விவசாயிகளுக்கான அடிக்கட்டுப்பசளை வழங்கப்படாத நிலையில் காணப்படுவதுடன் கமநலசேவை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்த காசுக்குரிய உரவினியோகத்திற்கான உரவகைகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.


குறிப்பாக, அடிக்கட்டுப் பசளைக்கான தட்டுப்பாடு தனியார் வர்த்தக நிலையங்களிலும் காணப்படுவதுடன் ஒரு அந்தர் அடிக்கட்டுப்பசளையின் விலை 3500 ரூபா வரைவிற்பனை செய்யப்படுகின்றது.

அதேபோல் யூரியாவின் விலை 3200 ரூபாவினையும் தாண்டிச்சென்றுள்ளது.

இதேபோன்று தற்போது நெற்பயிருக்கு தேவையான களைநாசினிகளின் விலைகளும் அதிகூடிய விலைகளில் காணப்படுகின்றன.

இவ்வாறு விவசாயிகள் தமக்குத்தேவையான உரவகைகள் மற்றும் களை நாசினிகளை பெற்றுக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதுடன் இவற்றை அதிகூடிய விலைகளில் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. (9-315)

# பாடசாலைகளை தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்றுவதற்கு பெற்றோர் எதிர்ப்பு



(பனிக்கன்குளம்)

பாடசாலைகளை தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்றுவதற்கு முல்லைத்தீவில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முத்தையன்கட்டு இடதுகரைப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் நேற்று முன்தினம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொரோனா தனிமைப்படுத்தும் நிலையங்களை அமைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன.

தனிமைப்படுத்தல் நிலையங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலைகளாக முத்தையன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலயம், அளம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், விசுவமடு பாரதி வித்தியாலயம், இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், கூழாமுறிப்பு பாடசாலை, தண்டுவான் அ.த.க. பாடசாலை உள்ளிட்டவை காணப்படுகின்றன.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் முத்தையன்கட்டு இடதுகரைப் பாடசாலையில் தளபாடங்கள் ஒதுக்கப்பட்டு மாணவர்களின் ஆவணங்கள் அடங்கிய அலுமாரி இராணுவத்தால் எடுத்துச்செல்லப்பட்டு அயலில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பாடசாலைக்கு முன்பாகக் கூடிய 60 இற்கும் மேற்பட்ட பெற்றோர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை இப்பாடசாலைக்கு அண்மையில் உள்ள பாடசாலையான வலதுகரை மகாவித்தியாயத்தில் கூடிய 30 இற்கும் மேற்பட்ட பெற்றோரும் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர். நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்ட விவசாய பிரதேசமாக முத்தையன்கட்டு காணப்படுவதாலும் தனிமைப்படுத்தல் நிலையம் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டால் இந் நடவடிக்கை ஆபத்தினை விளைவிக்கும் என எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (9-281)

# பிழையும் பிழை திருத்தமும்

(நேற்றைய தொடர்ச்சி)

இன்று நிகழ்ந்திருக்கும் அவலத்தின் காரணம் இங்குதான் புலப்படுகிறது. தம் சுயநலத்திற்காய், இறைவன் வகுத்த அறங்களை மீறி, அவன் வடிவாகிய இயற்கை மீது, மனுக்குலம் போர் தொடுக்கத் தொடங்கியது. அதன் பாதிப்பால் இன்று இறைவன், இயற்கையைக் கொண்டே நம்மீது போர் தொடுத்திருக்கிறான். மனிதனின் சிறு புத்தி எங்கே? இறைவனின் பெரும் சக்தி எங்கே? வல்லவராய்த் தம்மைத் தாமே வியந்துரைத்து, உலகை அசைப்பதாய் ஆட்டம் போட்டவர்கள் எல்லாம், இயற்கையூடு இறைவன் செய்த சிறு அதிர்வைத் தாங்க மாட்டாது, ஓடி ஒளிந்து உருக்குலைந்து நிற்கின்றார்.

இறைவன் படைத்த உலகியற்கையே அறம் என்று உணர்ந்ததால்தான் நம் மூதாதையர் அறத்தைப் பேணுவதில் பெரும் அக்கறை காட்டினர். முதல் நாள் போரில் தோற்று நிற்கின்றான் இராவணன். அவ்விடத்தில் அறம் பற்றிய ஓர் பேருண்மையை, உலகுரையாய் நமக்கு உணர்த்தி நிற்கிறான் கம்பன். இராவணனின் தோல்விக்கான காரணத்தை, இராமனின் வீரத்தின் மேல் ஏற்றாது, அறத்தின் ஆற்றலின்மேல் ஏற்றி கம்பன் உரைக்கும், "அறம் கடந்தவர் செயல் இது என்று உலகெலாம் ஆர்ப்ப நிறம் கரிந்திட நில்ம் விரல் கிளைந்திட நின்றான்" எனும் கவி அடிகள் ஆழ்ந்த சிந்தனைக்குரியன. - அதே காட்சியில், இராவணனுக்கு அறிவுரை கூறும் இராமனும், "அறத்தினால் அன்றி அமரர்க்கும் அரும்சமம் கடத்தல் மறத்தினால் அரிதி என்பது மனத்திடை வலித்தி" என, வெற்றியின் அடிப்படை, அறமே என உரைத்து நிற்பதும், நம் மூதாதையரின் ஆழ்ந்த அறச் சிந்தனையின் அறிவிப்புக்களாம்!

தேவைக்கு அதிகமான ஆசையினால், அற்புதமாக இறைவன் அமைத்துத் தந்த இயற்கையின் மேல் போர் தொடுத்து, இன்று அவ் இயற்கையால் தண்டிக்கப்பட்டு தத்தளித்து நிற்கிறோம் நாம். இங்கு ஓர் கேள்வி பிறக்கும். பெருங்கருணையாளனாகிய இறைவன் சிற்றறிவுடைய மனிதர்தம் பிழையை, ஓர் எச்சரிக்கை கூடச் செய்யாமல் இங்ஙனம் தண்டிக்கலாமா? இதுவே அக் கேள்வியாம்.

இவ்விடத்தில் ஓர் உண்மையை நாம் தெளிவுறத் தெரிந்து கொள்ள வேண்டும். நம் எல்லை மீறல்களைச் சகிக்க முடியாமல், இயற்கையூடு எச்சரிக்கைகள் பலதரமாய் நமக்கு விடப்பட்டன. நில அதிர்வு,காட்டுத்தீ, கடும்புயல், கடற்கொந்தழிப்பு என, இயற்கை விடுத்த எச்சரிக்கைகளை மனுக்குலம் கண்டுகொள்ளவில்லை. இன்றைய அறிவியலாளர்கள் பாதகங்கள் விளையாமல் தடுப்பதற்குப் பதிலாக விளைந்த பாதகத்திலிருந்து தப்புவது பற்றியே ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். காரணத்தை நீக்க காரியம் தானே நீங்கிவிடும் எனும், காரண காரியத் தொடர்பான உண்மை கூட, அவர் தமக்குப் புரியவில்லை. அதனாற்றான் இயற்கை விடுத்த எச்சரிக்கைகளை விளங்கிக் கொள்ளாமல், அவர்கள் தம் பாதகப் பயணத்தைத் தொடர்ந்தபடி இருந்தனர்.

இவ்விடத்தில், நம் தமிழ் மூதாதையரின் நிர்வாகம் பற்றிய, ஓர் ஆழ்ந்த சிந்தனையையும் பதிவு செய்ய விரும்புகிறேன். நிர்வாகத்திறம் பற்றி உரைக்கும் திருக்குறளின் பொருட்பால் பகுதியில், **பெரியாரைத் துணைக்கோடல்** எனும் ஓர் அதிகாரத்தை, வள்ளுவக் கடவுளார் அமைத்திருக்கிறார். ஒரு நாட்டின் நிர்வாகத்தை நடாத்தும் தலைவன், தீ நெறியில் இருந்து தன்னை விலக்கி, நன்னெறியில் செலுத்தும் பெரியோரை தனக்கு துணையாகக் கொண்டிருக்க வேண்டும் எனும் செய்தியையே, இவ் அதிகாரம் உரைக்கிறது.

இவ் அதிகாரத்தில், ஒரு தலைவனுக்கு வரக்கூடிய பாதிப்புக்களை, மானுடக் குற்றம், தெய்வக் குற்றம் என இரு வகையாய் வள்ளுவர் பிரிக்கிறார். அக்குற்றங்கள் பற்றிய விபரங்களையும் அவற்றை நீக்கும் முறைமையையும், உரையாசிரியர் பரிமேலழகர் மிகத் தெளிவாக விளக்கம் செய்கிறார். அவர் கருத்தை அவர் மொழியிலேயே தருகிறேன்.

"தெய்வத்தால் வரும் துன்பங்கள் ஆவன மழையினது இன்மை, மிகுதிகளானும் காற்று, தீ, பிணி, என்ற இவற்றானும் வருவன அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யப்படும் சாந்திகளால் நீக்கப்படும்"

"மக்களால் வரும் துன்பங்கள் ஆவன, பகைவர், கள்வர், கற்றறிந்தார், வினைசெய்வார் என்று இவர்களால் வருவன. அவை சாம, பேத, தான, தண்டங்கள் ஆகிய நால்வகை உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும்"

இங்ஙனம் உரைக்கும் பரிமேலழகர் தெய்வக்குற்றங்களை உட்பாதங்களால் (தீச்சகுனம்) அறிந்து, அவற்றை நீக்கும் வல்லமை உள்ள புரோகிதரையும், மக்களால் வரும் பகை முதலிய துன்பங்களை நீக்க, ஆற்றல் மிகுந்த அமைச்சர்களையும், தன்னுடன் வைத்திருக்க வேண்டும் என்றும், இவர்களே தலைவனால் பேணப்பட வேண்டிய பெரியோர்கள் என்றும், தெளிவுபட உரைக்கிறார்.

இன்றைய அரச நிர்வாகங்களில், அமைச்சர்களைப் பேணும் முறைமை உண்டு. புரோகிதர்களைப் பேணும் முறைமை இல்லை. அதனாற்றான் இயற்கை தீச் சகுனங்களால் விடுக்கும் எச்சரிக்கைகளை அறியமாட்டாது, இயற்கையின் பெருந்தாக்குதலுக்கு ஆளாகி நாம் நிலைகுலைந்து நிற்கிறோம்.

முன் சொன்னாற்போல, அண்மைக்காலமாக அடுத்தடுத்து நிகழ்ந்த இயற்கைச் சீற்றங்களை,இது இயற்கை விடுக்கும் எச்சரிக்கை என அறிந்திருந்தால், தொடர் மரணங்களாலும், வீட்டுச்சிறை வாழ்க்கையாலும், நாம் இந்த அளவு இன்று வேதனைப்பட வேண்டி வந்திராது.

பெரும்பாலும், மேற்சொன்ன இயற்கைச் சீற்றங்கள், இன்றைய உலகின் வலிமை பெற்ற வல்லரசுகளையே, சுற்றிச் சுற்றித்தாக்கியதையும், இன்று கொரோனாவால் அந்நாடுகளில் நிகழும் பேர் அவலத்தையும் கூட்டிக்கழித்துப் பார்க்க, தம் பலத்தால் உலகின் இயற்கையை மாற்ற நினைத்த, வல்லரசுகளின் அறம் மீறிய செயல்களுக்கான இயற்கையின் எதிர்வினைதான் இதுவோ என, ஐயுற வேண்டியிருக்கிறது.

வல்லரசுகளுக்கு பாதகத்திற்காம் பரிசு கிடைத்திருக்கிறது. மற்றை நாடுகளுக்கு, அவ் வல்லரசுகளுடன் அணி சேர்ந்து நின்று பாதகத்தைப் பார்த்திருந்ததற்காம் பரிசு கிடைத்திருக்கிறது.

மேற்சொன்னவை, நிகழ்ந்த பிழைகள் பற்றி ஆராய்ந்து உரைக்கப்பட்டவை. இனி பிழை திருத்தங்கள் பற்றியும் ஆராய்தல் அவசியமாகிறது. அப் பிழை திருத்தங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று, பாரம்பரியம் மிக்க மேற்சொன்ன சிந்தனைகளை நிராகரித்து, தம் அறிவுக்கு ஆட்பட்டதே இவ் உலகு என இன்றும் நம்புவோர்க்கான அறிவுறுத்தல். மற்றையது, மேற்சொன்ன பாரம்பரியங்களை நம்பி, நம் மூதாதையர் காட்டும் நன்னெறியில் செல்ல விரும்புவோர்க்கான அறிவுறுத்தல்.

தம் அறிவை மட்டும் நம்பி இயங்கும் முதல் பகுதியினர், இயற்கையை மாசுபடுத்தும் செயலில், தாம் எல்லை கடந்து பயணித்ததை உணர்ந்தும், இவ் உலகு மனிதர்க்கு மட்டுமானது எனும், தமது தவறான சிந்தனையின் போக்கை உணர்ந்தும், உடனடியாக அவ் இரு நிலைகளிலும் மாற்றம் உண்டாக்க வேண்டும். இயற்கையை அலட்சியம் செய்து அவற்றை நாம் மாசு செய்தோம். இன்று இயற்கை நம்மை அலட்சியம் செய்து ஒடுக்கி, தன்னைத் தான் தூய்மை செய்து கொண்டிருக்கிறது.

நாம் ஒடுங்கி வாழும் இக் காலத்தில், ஆறு, கடல், காற்று, ஆகாயம் எனும் அனைத்தும், தூய்மையாகிக் கொண்டிருக்கும் செய்தியை, விஞ்ஞானிகள் ஆராய்ந்து அறிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இன்றைய நம் துன்பம் இயற்கையின் எதிர்வினையே என்பதறிந்து, இயற்கைக்குப் பணிந்து செயலாற்றத் தலைப்படின், இவ் இயற்கைப் பாதிப்பிலிருந்து நாம் வெளிவரும் வழி தானாய்ப் பிறக்கும். இஃது முன்னவர்க்கான செய்தி!

இனி, நம் பாரம்பரியங்களிலும் மூதாதையரின் வழிகாட்டுதலிலும், நம்பிக்கை கொண்டோர்க்கான அறிவுறுத்தல். நம்முடைய மூதாதையர்களான, ரிஷிகளும், ஞானிகளும் தம் யோகக்காட்சியால், இன்றைய விஞ்ஞான ஆய்வுகளுக்கு அப்பால், எவ்வளவோ தூரம் சென்றுள்ளனர். இவ் உண்மையை நம்மில் பலர் அறியவில்லை. வெறும் விஞ்ஞான அறிவை மட்டும், அறிவின் எல்லையாய் நம்பி இருக்கும் அவர் தமக்கு, நான் சொல்பவை நகைப்பைத்தரலாம்.

அவர்தம் நகைப்புப் பற்றி எனக்குக் கவலை இல்லை! அவர்களுக்கு நான் நகைப்பிற்குரியவனாய்ப்படுவதும், எனக்கு அவர்கள் நகைப்பிற்குரியவராய்ப்படுவதும் இயற்கைதான்.

"நாடவர் நம்தனை ஆர்ப்பநாமும் அவர்தமை ஆர்ப்ப ஆர்ப்ப" என, இந்நிலையை மணிவாசகர் என்றோ பாடிவிட்டார். அவர்களைப் புறந்தள்ளி மற்றவர்க்காய் இனிச் செய்தி உரைக்கிறேன்.



கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

நம்முடைய வேதங்கள் அறிவின் "மூலமாய்க்" கருதப்படுபவை. அவ் வேத ஓசையுள் அனைத்துவித அறிவுகளின் கூறுகளும், சூக்குமமாய் உள்ளடங்கி இருப்பதாய் நம் பெரியவர்கள் உரைக்கின்றனர். சோதிடம் போன்ற கிரக சாஸ்திரங்களை, அன்றே உரைத்த ஒன்றே அவர்தம் அறிவிற்குச் சாட்சியாம். இவ் உண்மையை நம்பி மேற்குலகாரும், இன்று இவ் வேத ஆய்வில் ஈடுபட்டு வருவது வெளிப்படை.

இவ் வேத மந்திரங்களில், உலகின் அனைத்துப் பொருட்களின் அணு அசைவுகளும், "பீஜ மந்திரங்களாய்" பதிவாகியுள்ளதாய்ச் சொல்லப்படுகிறது. இம் மந்திரங்களை முறைப்படி உச்சரிப்பதன் மூலமும், உயர் வேள்விகளால் தேவுக்களைப் பிரீதி செய்வதன் மூலமும், இயற்கையின் சீற்றத்தை அடக்கலாம் என, நமது புராண, இதிகாசங்கள் பல இடங்களில் வலியுறுத்துகின்றன. இவற்றைச் சரிவர ஆற்றக்கூடிய வேதவிற்பன்னர்கள் பலர், பாரத தேசத்தில் பரவலாய் வாழ்ந்து வருகின்றனர்.

நமது ஈழமணித் திருநாட்டிலும் அத்தகையோர் ஒரு சிலர் வாழ்ந்துவரவே செய்கின்றனர். அவர்களின் பங்களிப்பு இந்நேரத்தில் அவசியமானது.

"கொரோனாவின்" தாக்குதலுக்கு அஞ்சி, இன்று ஆலயங்கள் பல பூட்டப்பட்டிருக்கின்றன. அச் செயலில் எனக்கு உடன்பாடில்லை. ஆலயங்களில் மக்களைக் கூட்டும் செயல் நிறுத்தப்படவேண்டுமே அன்றி, அந்தணர் இயற்றும் வேள்விகளும் பூசைகளும், எக் காரணத்தைக் கொண்டும் நிறுத்தப்படக் கூடாது என்று நான் கருதுகிறேன். எனவே, ஆலயங்கள் தோறும் வேதவிற்பன்னர்களால், முன்னையதைவிட அதிகமாய்ப் பூசைகளும் யாகங்களும் செய்யப்படல் வேண்டும். அவற்றில் எழுகின்ற மந்திர அதிர்வு, நிச்சயம் இன்றைய இயற்கையின் சீற்றத்தைத் தணிக்குமென, நான் உறுதியாய் நம்புகிறேன்.

வேதப்பயிற்சி இல்லாத மற்றையோர்க்கும் ஒரு கடமை உண்டு. அவர்கள் தத்தம் இல்லங்களில் இருந்தபடி, ஐந்தெழுத்து மந்திரத்தையோ, எட்டெழுத்து மந்திரத்தையோ, அல்லது தாம்தாம் விரும்பும் வேறு மந்திரங்களையோ முடிந்தவரை அதிக நேரம் உச்சாடனம் செய்ய வேண்டும்.

அது தவிர விநாயகர் அகவல், திருமுருகாற்றுப்படை, திருநீற்றுப் பதிகம், கோளறுப் பதிகம், அபிராமியந்தாதி, இராமயாணத்தில் வரும் கருடாழ்வார் துதி முதலிய பாசுரங்களை, தனித்தோ குடும்பத்துடன் இணைந்தோ, தினந்தோறும் முடிந்தவரை பாராயணம் செய்தல் வேண்டும். மேற்சொன்ன பாடல்களால் அற்புதங்கள் நிகழ்ந்தமை வரலாறு. இவ் உண்மை உணர்ந்து நம்பிக்கையோடு நம் போன்றவர்களும், ஒன்றிய மனத்தொடு இப்பாடல்களை ஓதினால் இயற்கையின் சீற்றத்தை அது பெருமளவு தணிக்கும் என்பது திண்ணம். மாற்று மதங்களைச் சார்ந்தவர்களும் தம் மதங்கள் உரைக்குமாறு இவ் இடர்தீர தம்வழிபாட்டினை இயற்றுதல் அவசியமாம்.

என் அறிவுக்குப்பட்டவரையில், இறை நம்பிக்கை உள்ளாரும் இல்லாரும், இயற்ற வேண்டிய கடமைகளை எடுத்துரைத்துள்ளேன். இக்கருத்துக்களில் சர்ச்சைகளும் தர்க்கங்களும் ஏற்படுத்தி, காலத்தை வீண் விரயம் செய்யாமல், அவரவர்க்குரிய வழியில், இயற்கையின் சீற்றத்தைச் சாந்தம் செய்ய முனைவோம். இஃது என் பணிவான வேண்டுகோள்.

நிறைவாக ஒரு வேண்டுகோள், இன்றைய பிரச்சினை உலகளாவி எழுந்திருக்கும் பிரச்சினை. இந்நிலையில் நம் மூதாதையர் உரைத்த மேற்சொன்ன உயர் கருத்துக்களை, உலகளாவி உரைப்பது நம் கடமையாம். எனது மொழியறிவின் வறுமையால், இக்கட்டுரையைத் தமிழில் மட்டுமே என்னால் எழுத முடிகிறது. இக்கட்டுரையைப் படிக்கும் பன்மொழிப்புலமை உள்ள வாசகர்கள், முடிந்தால் இக்கட்டுரையை உங்களுக்குத்தெரிந்த மொழிகளில் மொழிபெயர்த்து, பொது வெளியில் உலாவ விடுவதன் மூலம், நம் மூதாதையரின் கருத்துக்களை உலகெலாம் சேர்ப்பிக்க வேண்டும் என வேண்டிப் பணிகிறேன். இஃது என் விளம்பரம் நோக்கிய வேண்டுதல் அன்று. உலகின் விடுதலை நோக்கிய வேண்டுதல் என்பதை தக்கார் உணர்வார்களாக.

ஞானபூமியாகிய பாரதமே நான் பின் சொன்ன பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

பாரதத்தை வழிநடத்தும் இறை நம்பிக்கையுள்ள இன்றைய ஆட்சியாளர்களிடமும், மதிப்பிற்குரிய பாரதப் பிரதமரிடமும் இச் செய்தியைச் சேர்ப்பித்து, இம் முயற்சிகள் சிறக்க எவரேனும் துணை செய்தால், அது இவ் உலகிற்கு காலத்தால் செய்த உதவியாய் அமையும்.

**"சாதனை செய்க பராசக்தி"**

(முற்றும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# நோய் அணுகாமல் நலம் காக்கும் சித்த மருத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்த மருத்துவத்தின் முக்கியமான நோக்கமானது நோயானது ஏற்படாமல் ஒருவரை ஆரோக்கியமான வாழ்வை வாழச் செய்வதே ஆகும். Prevention is better than care. சித்தமருத்துவத்திலே நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான உணவு முறைகள், பழக்கவழக்கங்கள், சுகாதாரத் தடுப்பு முறைகள் என்பன கூறப்பட்டுள்ளன.

**"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" -திருக்குறள்**

வருமுன் காத்தல், வரும் போது காத்தல், வந்தபின் காத்தல் என்கின்ற மூன்று வகையான காப்பு முறைகள் உண்டு. இவற்றில் வருமுன் காத்தல் என்பதே மிகச் சிறந்ததும் செயற்படுத்த வேண்டியதுமாகும். வள்ளுவர் கூறியபடி நோய்க்கான காரணிகள் எவை என்பதை அறிந்து நோய்கள் நம் பக்கமே நெருங்காமல் பாதுகாத்துக் கொள்ளும் முறைகளை முழுமையாகத் தெரிந்து கொண்டு அவற்றை நம் வாழ்க்கை முறையோடு இணைத்துக் கொள்வதே நோயில்லா நலவாழ்வு ஆகும்.

சித்த மருத்துவ அடிப்படையில் சுரமானது ஒரு நோயாகக் கருதப்படுகிறது. சுரத்தின் பிரிவு பலவாகும். எல்லாச் சுரங்களும் வளி முதலான முக்குற்றங்களில் ஒடுங்கி தனிக்குற்ற அளவாகவும் கலந்த குற்றங்களின் அளவாகவும் 64 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ் அறுபத்து நான்கையும் வாதத்தில் 20, பித்தத்தில் 24, கபத்தில் 20 ஆகப் பிரிப்பர்.

இவற்றுள் வாதத்தில் எட்டு, பித்தத்தில் 10, கபத்தில் 9. எளிதில் தீராதவையாகும். இவ் அறுபத்து நான்கு சுரங்கள் தன் வழியாகப் பிறப்பது 52, பிறவழி யாகப் பிறப்பது 12 ஆக வகுக்கப்பட்டுள்ளது. பிறவழியில் பிறக்கும் சுரங்களில் பூதச்சுரமும் நச்சுச் சுரமும் அடங்கும். மேலும் வளிமுதலான குற்றங்கள் தத்தம் மாத்திரையில் மிகுதல் குறைதல்களால் உண்டான வேறுபாடுகளாலும் கால வேறுபாடுகளால் உண்டாகும் தட்ப வெப்பங்களின் பலனாலும் நச்சுச் சுரங்கள் பிறக்கும். இவ்வாறு அகக் காரணிகளாலும் புறக்காரணிகளாலும் சுரம் தோன்றுகிறது. நோய்கள் பிறப்பதற்கான வழிகள் பலவாக இருப்பினும் அவை தோன்றும்போது வாதம்முதலாகிய முக்குற்றங்களுள் ஒடுங்கும்.

பொதுவாக சுரம் வருவதற்கு ஆமாசய கோளாறுகளே முதன்மையாக நிற்கும் என்பதால் இந்நோய்க்குரிய மருத்துவத்தில் முதன்மையாக உள்ள கோளாறுகளைப் போக்கி தன்னிலை திரிந்த குற்றங்களை தத்தம் வழி நிகழச் செய்ய வேண்டும். சுரத்திற்கு முக்கியமாக இலகு ஆகாரங்களே சிறந்தது. மேலும் சிறு **உணவு பெரு மருந்து** எனும் மருத்துவப் பழமொழிக்கு அமைய சுரம் தீரும் வரை கஞ்சி போன்ற ஆகாரங்களைக் கொடுப்பதும் வியர்வையைப் பெருக்கச் செய்ய




வேது பிடித்தல், கண் மருந்துகள், மூக்கு மருந்துகள் போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன.

உடலில் உருவாகும் கபத்தினால் கரோதஸ்கள் தடை செய்யப்படுவதால் மயிர்க்கால்களின் கண்ணை மறைத்து உடல் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்கிறது. அவ்வாறு அதிகரித்த வெப்பநிலையை குறைக்க சுரமடக்கி, முறைவெப்பமகற்றி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி, நாற்றமடக்கி, உள்ளழலாற்றி, குளிர்ச்சி உண்டாக்கி செய்கை உள்ள மூலிகைகளைப்பயன்படுத்தவேண்டும்.

நாம் குடியிருக்க ஏற்ற கால நிலை, வளமான மண், நல்ல நீர் இருந்த இடங்களில்தான் சிறந்த நாகரிகங்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றன. நம்மைச் சுற்றியுள்ள இயற்கை- வேதிம உயிரியல் காரணங்கள் (காற்று, வெப்பநிலை, வெயில், மழை, செடி, கொடி, தாவரங்கள், மரங்கள், நீர் போன்றவை) தான் நமது உடல் நலத்தையும் உயிர்ப் பிழைப்பையும் கூட முடிவு செய்கின்றன. இப்படிப்பட்ட நல்ல சுற்றுச்சூழல்தான் இனி வரும் காலத்திலும் நம் வாழ்வைத் தீர்மானிக்கப் போகின்றன.

நமது உடல்நலத்திற்கு வருமுன் தடுப்பு எப்படியோ அப்படியே சுற்றுச் சூழலும் ஒரு கட்டாயத் தேவையாகும். தூயகாற்று, மண், வளி மண்டலம், நீர் இன்றி மனித இனம் உயிர்வாழ முடியாது. உயிர்ப்பளிக்கும் சுற்றுச்சூழலை சித்த மருத்துவம் அழகாக அண்டத்தில் உள்ளதே பிண்டம் எனும் கோட்பாட்டிற்குள் உள்ளடக்கியுள்ளது.




எனவே நாம் ஆரோக்கியமாக வாழவேண்டுமாயின் தற்போது நடைபெறும் பருவகாலமான இளவேனில் காலத்தில் (சித்திரை, வைகாசி) அனுசரித்து உட்கொள்ள வேண்டிய, தவிர்க்க வேண்டிய உணவு முறைகளைக் கையாண்டு ஆரோக்கியத்தைப் பேணி வருதல் வேண்டும். பருவ காலங்களுக்கு ஏற்ப வாத, பித்த, கப தாதுக்களின் விருத்திக் குறைவிற்கு ஏற்ப நாம் உணவு முறைகளையும் பழக்கவழக்கங்களையும் மாற்றியமைத்துக் கொள்ளல் அவசியம். இளவேனில் காலத்தில் சூரிய வெப்பத்தால் கபமானது வேற்றுநிலை விருத்தி அடைகிறது. இக்காலத்தில் சுவாசாயத் தொற்றுக்கள் அதிகளவில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இக்காலத்தில் வறட்சியும் வெம்மையும் உள்ள கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு சுவையுள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். கபத்தை தன்னிலைப்படுத்தக்கூடிய சுவ்மை வீரியமுள்ள, இலகு வரட்சி குணம் உள்ள உணவுகளையும் பழக்க வழக்கங்களையும் வெப்பத்தைத் தணிக்கக்கூடிய நீராகாரங்களையும் பருகுதல் வேண்டும்.


இக்காலத்தில் ஏற்படும் தொற்று நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபடவும் எமது ஏழு உடற்கட்டுக்களையும் ஒட்சிசனையும் நன்றாகப் பேணுவதற்கும் எமது மருத்துவத்திலே பல உணவுப் பழக்கவழக்கங்கள், கற்பமூலிகைகள், ஆசனப் பயிற்சிகள் கூறப்பட்டுள்ளன. இவை எமது உடல் நலத்தை மட்டும் பேணாது மன நலத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன. நாம் எமது இயற்கையானதும் பாரம்பரியமானதுமான பழக்கவழக்கங்களையும் உணவு முறைகளையும் மறந்து எமது தட்ப வெப்ப காலத்தில் கைக்கொள்ளும் நடவடிக்கைகளை மீறிச் செயற்பட்டுக் கொண்டு வருவதனால்தான் தற்போது பல நோய்த்தொற்றுக்களுக்கு உள்ளாகி வருகின்றோம். நாம் இயற்கையோடு இணைந்த வாழ்விற்கு மீளச் செல்வதன் மூலம் ஆரோக்கியமாக வாழமுடியும். (Back to nature).

இளவேனில் காலத்தில் பொதுவாக தேகபலமானது குறைவாகக் காணப்படும். ஆகவே நாம் போசணைகாரி, உடல் உரமாக்கி, உடல் தேற்றி செய்கை உள்ள உணவுகளைப் பயன்படுத்த வேண்டும். இக்காலத்தில் வெளித்தொற்றுக்கள் இலகுவாக ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு. சித்த மருத்துவம் கூறும் பாரம்பரிய உணவுமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் இலகு மூலிகை வழிவகைகளைக் கையாள்வதன் மூலம் நோய்த்தொற்றுக்களில் இருந்து விடுபடமுடியும்.

தற்காலத்தில் ஏற்பட்டுள்ள நோய்த்தொற்றிலிருந்து விடுபடக் கூறப்படும் தற்காப்பு முறைகளில் பயன்படும் பெரும்பாலான மூலிகைகள் காயகற்ப மூலிகைகளாகவும் அதிகரித்த உடல் வெப்ப நிலையைக் குறைத்து சிறுநீரைப் பெருக்கி உடலைக் குளிர்ச்சி அடையச் செய்கின்றன.

**ஆடாதோடைக் குடிநீர்- சரபேந்திரர் சித்தவைத்தியச் சுடர்**

**சேரும் சரக்குகள்**- ஆடாதோடை இலை, சீந்தில் தண்டு, சுக்கு, மிளகு, கோரை, பற்படாகம், பேய்ப்புடோல், விஷ்ணுகிராந்தி, சிறுகாஞ்சோன்றி, வெள்ளறுகு வேர்.




**செய்முறை**- மேற்குறித்த சரக்குகளை சம அளவில் எடுத்து 4 பங்கு நீர் விட்டு ஒரு பங்காக வற்றக்காய்ச்சி எடுத்தல்

**உபயோகிக்கும் முறை**- 30- 60 மில்லி வீதம் காலை, மாலை பயன்படுத்தலாம்.

**மூலிகைகளின் செய்கைகள்**

ஆடாதோடை இலை, சிறுகாஞ்சோன்றி- சுவாசாசயத் தாபி தங்களைப் போக்கும்.

விஷ்ணுகிராந்தி, பேய்ப்புடோல், பற்படாகம்- சுரம் அகற்றி, சிறுநீர் பெருக்கி

விஷ்ணுகிராந்தி, வெள்ளறுகு வேர், கோரை- காயகற்ப மூலிகைகள், உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கும்.




**சகலவிதமான சுரங்களுக்கும் சொல்லப்பட்ட குடிநீர்**

**சேரும் சரக்குகள்**- சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெட்டி வேர், விலாமிச்சு வேர், விஷ்ணு கிராந்தி, கீழ்காய்நெல்லி, அமுக்கிரா, பறங்கிக்கிழங்கு, நன்னாரி, கொத்தமல்லி, ஆடாதோடை, துளசி, தூதுவளை, கண்டங்கத்தரி, சந்தனம், சீந்தில், சிற்றரத்தை, பேய்ப்புடோல், நில வேம்பு, பற்படாகம், வில்வைவேர். (தொடரும்)

> பேச்சு பெரியதே. ஆனால் மௌனத்தின் மொழி அதைவிடப் பெரியது.
>
> ~ *கிருபானந்த வாரியார்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எடுக்கின்ற தீர்மானங்களை தெளிவாக தெரியப்படுத்துங்கள்

"தெளிவு" என்ற தமிழ்ச் சொல்லின் மகிமையை பலரும் உணராதிருப்பது வேதனைக்குரியது.

தெளிவு என்பது ஒருவரின் நிதானத்தை, அறிவாற்றலை, விடயப் பொருள் மீது அவரிடம் இருக்கின்ற புலமையைச் சுட்டி நிற்பதாகும்.

இங்கு பேசுவதில், எழுதுவதில், கருத்துரைப்பதில், அச்சுப்பதிப்புச் செய்வதில் என தெளிவு என்ற உயர் சொல், ஆட்சி செய்கிறது.

இதனாலேயே தெளிவு என்ற சொல்லை வள்ளுவன் தன் குறளில் பதிவு செய்தான்.

*தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்...*

என்ற குறளில் தெளிவு என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

பாண்டிய மன்னன் கோவலனைக் **கொண்டு** வா என்று கூறியது **கொன்று** வா எனக் குழப்ப முற்றபோது, பாண்டிய மன்னன் இறக்க நேர்ந்தது. பாண்டிமாதேவி உயிர் துறந்தாள். பாண்டியநாடு எரிந்தது.

இவை தெளிவு இல்லாத வார்த்தைகளால் வந்த நாசம் என்பது உணர்தற்குரியது.

இதுதவிர, தெளிவற்ற வார்த்தைகளும் தெளிவற்ற அவ்தானங்களும் பல குடும்பங்களில் குழப்பங்களை ஏற்படுத்தியிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

எனவே எந்த இடத்தும் தெளிவு என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டும்.

இருந்தும் கொரோனாத் தொற்றுத் தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் குழப்பத்துடனேயே மக்களைச் சென்றடைகின்றன.

சொற் தெளிவின்மை, மொழி பெயர்ப்புக் குழப்பம், வசனம் அமைப்பதில் ஏற்படுகின்ற இடர்பாடுகள் என்பன மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

அதிலும் ஊரடங்குச் சட்டம் அமுலாவதும் தளர்த்தப்படுவதும் தொடர்பில் மக்களிடையே ஏற்படும் குழப்பம் சொல்லி மாளா.

ஊரடங்குச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையொன்றில், தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் மக்கள் நடமாட முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பு கொழும்பு, கம்பஹா, புத்தளம், களுத்துறை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கே பொருந்தும் என்றே மக்கள் கருதினர்.

ஆனால் ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவு இலங்கை முழுமைக்குமான அறிவிப்பாகவே அதனை வெளியிட்டிருந்தது.

எனினும் இந்த அறிவிப்பு தெளிவற்றதாகவே இருந்தது.

ஆக, எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள், அவை தொடர்பில் வெளியிடப்படுகின்ற அறிவிப்புகள் தெளிவாக இருப்பது மிகவும் முக்கியமானது.

அதேநேரம் இத்தகைய அறிவிப்புக்களை அவசரப்பட்டு வெளியிடுவதில் அதி தீவிரம் காட்டுகின்ற ஊடகங்கள், குறித்த தகவல்கள் தெளிவாக இருக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துவது மக்கள் குழம்பாமல் இருப்பதற்குப் பேருதவியாக அமையும்.

# இலங்கை மின்சாரசபை நாளொன்றுக்கு ஒன்றரைக்கோடி ரூபாயை சேமிக்கலாம்

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் கரந்தகொல்ல நீர்மின் திட்டத்தின் பணிகள் இன்னும் ஆறு மாதங்களுக்குள் நிறைவடையும் என போக்குவரத்து, மின்சக்தி வலு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அதன்பின்னர், இலங்கை மின்சார சபைக்கு நாளொன்றுக்கு ஒன்றரைக் கோடி ரூபாயை சேமிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

எல்ல, கரந்தகொல்ல நீர்மின் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை அவதானிக்கும் நோக்கில் அமைச்சர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், "உமா ஓயா பலநோககு அபிவிருத்தித் திட்டத்தின் பணிகள் சற்றுத் தாமதமடைந்துள்ளன. அதனை விரைவாக முன்னெடுப்பது பற்றி ஆராயப்பட்டது.

உமாஓயா மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளது.

எனவே, இத்திட்டம் முடிவடைந்த பின்னர் இலங்கை மின்சார சபைக்கு நாளொன்றுக்கு ஒன்றரை கோடி ரூபாயை சேமிக்கக் கூடியதாக இருக்கும்.

முன்கூட்டியே திட்டமிட்டிருந்த கால எல்லைக்குள் திட்டம் நிறைவுபெறவில்லை. பல தடைகள் ஏற்பட்ட நிலையில் அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது. இதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் முழு ஆதரவையும் வழங்கியுள்ளனர்.

திட்டம் பற்றி அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளேன். தேர்தலை இலக்கு வைத்து நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தவில்லை.

இதன் பணிகள் நிறைவு பெறுவதற்கு இன்னும் 6 மாதங்களாவது செல்லும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒகஸ்ட் மாதம் வைரஸ் தொற்று அதிக எண்ணிக்கையை எட்டும்

## தென்னாபிரிக்க மக்களுக்கு எச்சரிக்கை

(பிரிட்டோரியா)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம வைரஸ் தொற்று அதிக எண்ணிக்கையை சென்றடையும் நிலைக்கு தள்ளப்படுவோம் என தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆகையால், ஊரடங்கு தளர்த்தப்படுவதால் மக்கள் யாரும் அதிக நம்பிக்கை அடைய வேண்டாம் என அவர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் கொரோனா வைரஸ்தொற்று மிக வேகமாக பரவிவரும் நிலையில், நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளில் சிலவற்றை தளத்த அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. இந்த பின்னணியில் ஜனாதிபதி இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதனால், பொதுமக்கள் அனைவரும் சமூக இடைவெளியை பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஊரடங்கு உத்தரவை படிப்படியாக தளர்த்தும் முதற் கட்டமாக, 1.5 மில்லியன் மக்கள் தங்கள அலுவலக பணிகளுக்கு திரும்ப தயாராகவுள்ளனர்.

மேலும், சில பாடசாலைகளும் திறக்கப்படும், வீட்டிற்கு சமைத்த உணவுகளை கொண்டு சேர்க்கும் பணிகள் ஆரம்பமாகும்: சிகரெட் விற்பனை ஆரம்பமாகும் என பல அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. ஆனால் மக்கள் கூடுவதற்கும், மது விற்பனைக்கும் தடை நீடிக்கும்.

கொரோனா வைரஸால் ஏற்படவிருக்கும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க தென்னாபிரிக்கா 26 பில்லியன் டொலர்கள் தேவை என சர்வதேச அளவில் நிதியுதவி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை தென்னாபிரிக்காவில் மட்டும் 4,793 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 90 பேர் உயிரிழந்துள்ளனர். 1473பேர் குணமடைந்துள்ளனர். (ஜ-2)

# வவு. நீதிமன்றின் அறிவித்தல்

(குருமன்காடு)

நாட்டில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்து வருவதையடுத்து நீதிமன்றத்திற்கு வருகை தருபவர்களுக்கு வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளர் முக்கிய அறிவித்தல் விடுத்துள்ளார்.

குறித்த அறிவித்தலில் அழைக்கப்படும் வழக்குகள் (Calling Cases) காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் விளக்க வழக்குகள் (Trial Cases) பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரையும் இடம் பெறும் எனவும் அத்துடன் நீதிமன்றத்திற்கு வரும் சகலரும் முகக்கவசம் அணிந்து வரவேண்டும், நீதிமன்றத்திற்கு வருகின்ற அனைவரும் தங்களது கைகளை நன்றாக கழுவிய பின்னர் (உரிய ஏற்பாடுகள் நீதிமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன) நீதிமன்ற உத்தியோகத்தரின் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரின் அறிவுறுத்தலை பின்பற்றி ஒதுக்கப்பட்ட இடங்களில் உரிய இடைவெளி விட்டு நிற்க வேண்டும்.

மேலும் திறந்த நீதிமன்றத்தில் ஒரு தடவையில் வழக்குகளுடன் தொடர்புடைய 10 நபர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர். அவர்கள் திறந்த நீதிமன்றத்திற்குள் சென்று அமைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளை பேணி நடக்க வேண்டும் .

அத்துடன் நீதிமன்ற நடவடிக்கை முடிவடைந்த பின்னர் எக்காரணம் கொண்டும் தாமதிக்காது நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியேற வேண்டும். பொதுமக்கள் யாரும் சிற்றுண்டிச்சாலைக்கு செல்ல அனுமதிக்கப் படமாட்டார்கள்.

2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நீதிமன்ற கட்டளைப்படி இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளரின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளது. (9-250)

# ஆன்மீகச் சிந்தனைகள்

## இயற்கையோடு இணைவோம்

❖ எல்லா உயிர்களையும் தன்னுயிராக மதித்துப் பேணுங்கள்.

❖ உலகிலுள்ள அனைவருக்காகவும் அன்றாடம் வழிபாடு செய்யுங்கள்.

❖ குற்றம் செய்வது மனித இயல்பு. ஆனால், அதையும் குணமாக ஏற்று அருள்புரிவது கடவுள் இயல்பு.

❖ நல்ல உணர்வுகளை உண்டாக்கும் சாத்வீகமான உணவுகளை மட்டுமே சாப்பிடுங்கள்.

❖ நம் உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்கும் அமுதம் போன்றது இயற்கை. அதனால், இயற்கையோடு இணைந்து வாழுங்கள்.

# நிறுவனத் தகவல்கள் இணையத்தில் பதிவேற்றம்

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 வைரஸின் தாக்கத்தால் வடமாகாணத்திலுள்ள சகல தனியார் துறை நிறுவனங்களினதும் வழமையான செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் முகமாக தங்களின் நிறுவனம் தொடர்பான விபரங்களை 2020. 05.03 ஆம் திகதிக்கு முன்னர் தொழில் திணைக்களத்தின் இணையத்தளமான **http://www.labourdept.gov.lk.** இல் காணப்படும் தகவல் சேகரிப்பு படிவத்தில் **(Survey on Private Sector Establishments Affected due to COVID19 GOOGLE FORM)** அவசியமாக பதிவேற்றம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இத்தகவல் சேகரிப்பானது நிறுவனங்களின் வியாபாரம் மற்றும் ஊழியம் என்பவற்றைப் பாதுகாக்கும் முகமாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

சிறந்த முடிவுகளுக்கு மிகவும் இன்றியமையாதது என யாழ்ப்பாணம் உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)


# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன் புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்க்கட்டு பிரதேசம், நாவலர் வீதி கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டி வீதி வரை, பாரதி வீதி, புறூடி வீதி, நொத்தாரிஸ் லேன், நல்லூர் குறுக்கு வீதி, கண்டி வீதியில் கச்சேரியிலிருந்து கண்டி வீதி செம்மணி வரை, இலந்தைக்குளம், புங்கன் குளம், முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்குப் பிரதேசம், செல்லர் வீதி, ராணி வீதி, யாழ் மாநகர சபை அலுவலகம், **Ministry Of Education, Carlton Sports Network (CSN),** அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பீ.எல்.சி, **SOS Childen Village,** லிங் ரெடி மிக்ஸ் பிறைவேட் லிமிடெட் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# ஓசோன் படலத்தின் துளை தானாகவே மூடல்!

## விஞ்ஞானிகள் விளக்கம்



(வோஷிங்டன்)

ஓசோன் படலத்தில் ஏற்பட்ட துளையானது தானாகவே மூடிக் கொண்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஓசோன் படலத்தை தொடர்ச்சியாக அவதானித்து வரும் விஞ்ஞான நிபுணர் குழுவினால் உத்தியோகபூர்வமாக குறித்த அறிவித்தல் வெளியாகியது.

கொரோனா வைரஸ் காரணமாக உலகின் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தொழிற்சாலை மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள அதேவேளை உலகளாவிய ரீதியில் வாகனப்போக்குவரத்து வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இந்நிலையில் குறித்த செயற்பாடுகள் காரணமாக வளிமண்டலத்தில் தூசுத் துகள்களின் படிமங்கள் குறைவடைந்துள்ளமையானது ஓசோன் படலத்தில் ஏற்பட்ட துளை மூடிக்கொள்வதற்குக் காரணமாக இருக்கலாம் எனப் பலர் கருத்துத் தெரிவித்து வரும் நிலையில் குறித்த செயற்பாட்டிற்கு வளிமண்டலத்தின் தரமாற்றங்கள் காரணம் அல்ல எனவும் வலுவான மற்றும் நீண்ட கால துருவு சுழற்சியின் மூலம் ஏற்படுத்தப்பட்டது எனவும் விஞ்ஞானிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக பூமியில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றத்தால் ஓசோன் படலத்தின் துளைகள் குறைந்துள்ளதா என்பது குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கடந்த மாதம் ஆராய்ச்சி செய்தனர்.

ஆனால் பூமியின் வடதுருவமான ஆர்ட்டிக்கின் மேற்பகுதியில் இருக்கும் ஓசோன் படலத்தில் ஒரு மில்லியன் சதுர கிலோ மீற்றர் அளவில் பெரியதுளை புதிதாக உருவாகி தென் துருவத்தை நோக்கி விரிவடைந்து வந்தது. இதனைத் தொடர்ந்து குறித்த துளை தொடர்பாக செயற்கைக் கோள் உதவியுடன் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர். இந்நிலையிலேயே ஓசோனில் ஏற்பட்டிருந்த குறித்த துளை மூடப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. (ஜ-2)

# நியூசிலாந்தில் கொரோனாத் தொற்றுப் பரவலின் அனைத்து மூலங்களையும் கண்டறிந்துவிட்டோம்

## பிரதமர் ஜெசிந்தா பெருமிதம்



(வெலிங்டன்)

கொரோனா வைரஸ் பாதிப்பால் உலகின் பெரும்பாலான நாடுகள்முடக்க நிலையில் இருந்துவரும் சூழலில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் நியூசிலாந்தில் முடக்கநிலை படிப்படியாக தளர்த்தப்பட்டு வருகிறது.

கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர் தங்கள் பணிகளுக்கு நேற்றுச் சென்றனர். அதேவேளையில் நியூசிலாந்தில் சில பாடசாலைகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் ஆகியவையும் திறக்கப்பட்டன.

மேலும் உணவகங்களில் இருந்து மக்கள் உணவை வாங்கிச் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர். நியூசிலாந்தில் கொரோனா வைரஸ் பரவலின் அனைத்து மூலங்களும் கண்டறியப்பட்டுள்ளதால் "அந்தப் போரில் வென்றுவிட்டதாக" நியூசிலாந்தின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொரோனா வைரஸை "இல்லாது ஒழிக்கும் இலக்கை" நியூசிலாந்து அடைந்துவிட்டதாக அந்த நாட்டின் சுகாதாரத்துறையின் தலைமை இயக்குநர் ஆஷ்லே ப்ளூம்ஃபீல்ட் தெரிவித்தார்.

"இதற்கு நியூசிலாந்தில் கொரோனா வைரஸ் தொற்றே இல்லையென்று அர்த்தம் கிடையாது. ஆனால் நோய்த்தொற்று பரவலின் அனைத்து மூலங்களையும் கண்டறிந்துவிட்டோம் என்று அர்த்தம்" என்று அவர் விளக்கம் அளித்துள்ளார்.

இதுவரை நியூசிலாந்து முழுவதும் 150 இற்கும் குறைவானவர்களுக்கே கொவிட் - 19 நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் அவர்களில் 80 சதவீதத்தினர் ஏற்கனவே குணமடைந்துவிட்டனர். அங்கு இந்த தொற்றின் பாதிப்பால் 19 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கொரோனா கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வழமைக்கு திரும்பவுள்ள ஹொங்கொங்

(ஹொங்கொங்)

கொரோனா வைரஸ் (கொவிட்-19) கட்டுப்பாடுகளால் முடங்கிப் போயுள்ள ஹொங்கொங், வழமைக்கு திரும்பவுள்ளது.

நடைமுறையில் உள்ள சில கட்டுப்பாடுகளை தளர்த்தி மக்களின் வாழ்க்கையை இயல்பாக்குவதற்கு ஹொங்கொங், அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக அரச ஊழியர்கள் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி முதல் பணிக்குத் திரும்பத் தொடங்குவார்கள்.

தனது வாராந்திர செயற்குழுக் கூட்டத்திற்கு முன்னதாக உரையாற்றிய போதே தலைமை நிர்வாகி கேரிலாம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதனை இரண்டு கட்டங்களாகச் செயற்படுத்தப் போவதாகவும் கொரோனா வைரஸ் தொற்று நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தோன்றுவதால், அரச சேவைகள் இயல்பான இயக்க நேரங்களை மீண்டும் தொடங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'பாடசாலைகள் போன்ற சில இடங்கள் மூடப்பட்டிருப்பதால் விதிவிலக்குகள் இருக்கும். தற்போதுள்ள சமூக தொலைதூர விதிகளை மனதில் கொண்டு, வெளிப்புற விளையாட்டு இடங்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ளிட்ட பொது வசதிகள் மீண்டும் திறக்கத் தொடங்கும்.

இது தொடர்பாக அரசாங்கம் நிலைமையை மறுபரிசீலனை செய்து வருகின்றது. தற்போதைய சமூக தொலைதூர நடவடிக்கைகள் தளர்த்தப்பட வேண்டுமா? என்று முடிவு செய்யவுள்ளோம். நிலைமையின் ஏற்ற, இறக் கம் பற்றி அண்மையில், உலக சுகாதார அமைப்பு அதையே கூறியது.

நாம் தயாராக இருக்க வேண்டும், விதிகளை ஒரே நேரத்தில் எளிதாக்காமல் படிப்படியாக மட்டுமே செய்ய வேண்டும்.

ஆனால் நாங்கள் விதிகளை தளர்த்தியவுடன், தேவைப்பட்டால், அவற்றை மீண்டும் இறுக்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

கடந்த ஒன்பது நாட்களில் 16 தொற்றுகள் மட்டுமே உள்ளன. ஜனவரி மாதத்தில் வைரஸ் பரவத் தொடங்கியதில் இருந்து ஹொங்கொங்கில் மொத்தம் 1,038 பேர் பாதிக்கப்பட்டதுடன் நான்கு பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கொரோனா அச்சுறுத்தல்

# மேலும் 14 நாடுகளுக்கு தடை விதித்த ஜப்பான்

(டோக்கியோ)

கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரும் நிலையில், ஜப்பான் அரசு மேலும் 14 நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்குத் தடை விதித்துள்ளது.

கொரோனா வைரஸ் மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு வேகமாகப் பரவி வருவதால், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடும் சூழ்நிலைக்கு ஏற்ப, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்குத் தடை விதித்துள்ளது.


அவ்வகையில் 70 நாடுகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் அந்த நாடுகளுக்கு சென்று வந்தவர்கள் ஜப்பானுக்குள் நுழைய ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது ரஷ்யா, பெரு, சவுதி அரேபியா உள்ளிட்ட மேலும் 14 நாடுகள் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள், அங்கு சென்று வந்தவர்கள் ஜப்பானுக்குள் நுழையத் தடை விதித்து பிரதமர் ஷின்சோ அபே உத்தர விட்டார்.

இன்று புதன்கிழமை முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வரும்.

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கான நுழைவுத் தடை மற்றும் விசா கட்டுப்பாடுகள், நாளை 30 ஆம் திகதியிலிருந்து மே மாதம் இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில்கொரோனா வைரஸால் 13,385 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 364 பேர் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சால்வடோரில் மிக நெருக்கடியான நிலையில் சிறைக்கைதிகள்; கொரோனா கட்டுப்பாடுகளை கண்டுகொள்ளாத அரசாங்கம்



(சல்வடோர்)

மத்திய அமெரிக்க நாடான எல் சல்வடோரில் சிறைக்கைதிகள் கொரோனா கட்டுப்பாடுகளை மீறி நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டமை சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளது.

உலகெங்கும் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் பரவலால் அமெரிக்கா கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் தனிமனித மற்றும் பொருளாதார இருப்பை கேள்விக்குள்ளாக்கி வரும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் தனிமனித இடைவெளியினை பேணுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய அமெரிக்க நாடான எல் சல்வடோரில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் உள்ள சிறைக்கைதிகள் கொரோனா கட்டுப்பாடுகளை மீறி நெருக்கமாக அமர வைத்துள்ளமையானது சர்வதேச ரீதியாக பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரத்தின் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குறித்த சிறைக்கைதிகளின் சிறைக்கூடங்களில் தேடுதலைகளை நடத்தும் பொருட்டு குறித்த சிறைக்கூடங்களில் இருந்த கைதிகள் இவ்வாறு அமர வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-2)

## 1,553 பேருக்கு...

எப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் 16 நிலையங்களில் கொரோனாவுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கொரோனா சவா...

முன்னெடுத்துள்ளது. பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வைரஸ் பரவல் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே சவால்களை வெற்றிக்கொள்ள முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து உரிய பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையினை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்துள்ளது. அரசியல் நோக்கங்களை கருத்திற் கொண்டு அரசாங்கம் தற்போது செயற்படவில்லை.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (ம-3)

## கைது செய்யப்...

கழகத்தில் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் போலியான தகவல்களை பிரசாரம் செய்த குற்றச்சாட்டில் அண்மையில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களின் போது, கருத்து சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.

அத்துடன் கைது செய்யப்படும் நபர்களை துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தக்கூடாது எனவும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகம வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## கொரோனா தொற்...

அம்புலன்ஸ் வண்டியில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

குறித்த நபர் தொடர்ந்து 14 நாட்கள் அவருடைய வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு இருப்பார்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 5 ஆவது நபரும் குணமடைந்துள்ளார். (ம-3)

## ஊரடங்கை மீறி...

றினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊரடங்கு சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 41 ஆயிரத்து மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது முதல் இதுவரையான காலப்பகுதியில் 10,560 வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-3)

## கொரோனாவை கட்டுப்படுத்து...

லணியின் மீளாய்வு கூட்டம் அமைச்சர் பவித்ரா வன்னிஆராச்சி தலைமையில் நேற்று சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இந்த விசேட செயலணியில் வைத்திய அதிகாரிகள், நிர்வாக சேவை அதிகாரிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் உள்ளடங்களாக 35 பேர் உள்ளடங்கும் அதேவேளை இந்த செயலணி இரண்டு நாளைக்கு ஒரு முறை சுகாதார அமைச்சர் தலைமையில் ஒன்று கூடி தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராயும் நோய் தொற்று குறைவான மாவட்டங்களில் உள்ள வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு மிகச் சிறந்த பராமரிப்பை வழங்குவது, வைத்தியர்கள் உட்பட அனைத்து வைத்திய சாலை ஊழியர்களின் பாதுகாப்பையும் உறுதிசெய்வது குறித்து இதன் போது கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் வைத்தியசாலை ஊழியர்களை பராமரிக்க தேவையான பாதுகாப்பு உடைகள் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குவது தொடர்பிலும் இங்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

பி.சி.ஆர் பரிசோதனைக்கு மருத்துவ உபகரணங்களைப் பெறுவதற்கும், தினசரி பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், கோவிட்-19 தடுப்பு திட்டத்தில் பெரும் பங்கு வகிக்கும் சுகாதார அலுவலகங்களுக்கு கூடுதல் வாகனங்களை வழங்குவதற்கும் இங்கு முடிவெடுக்கப்பட்டது.

கோவிட் 19 வைரஸ் பரவலை தடுப்பதற்காக சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சுகாதார அவசரகால செயல்பாட்டு மையத்தை அமுல்படுத்துவது குறித்தும் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரை அணுகவும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-3)

## ஊரடங்கு சட்டம் விரைவில் தளர்த்த...

பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ சங்க சபையின் மகாநாயக தேரர் சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார மகாநாயக்க தேரர் மற்றும் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரை சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துக்களை பகிர்ந்துகொண்டார்.

கோவிட் 19 நோய்த்தொற்று குறித்த தற்போதைய நிலைமைகளை கேட்டறிந்த தம்மாலங்கார மகாநாயக்க தேரரும் கார்டினல் அவர்களும் வைரஸை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களை பாராட்டினர்.

நோய்த்தொற்றை விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று சமயத் தலைவர்கள் இருவரும் நம்பிக்கை தெரிவித்ததுடன், விரைவில் ஊரடங்குச் சட்டத்தையும் தளர்த்தக்கூடியதாயிருக்கும் என்று ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார்.

எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு வீடுகளிலிருந்து சமயக்கிரியைகளில் ஈடுபடுமாறு பௌத்த மக்களுக்கு அறிவிப்பதாக மகாநாயக்க தேரர் குறிப்பிட்டார். அதற்காக ஊடகங்களை பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் குறித்து ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் குறித்து கேட்டறிந்த மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த தாக்குதல் சம்பவத்தின் பின்னால் உள்ளவர்களை கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தற்கொலை தாக்குதலின் மூலம் மரணத்தையும் கடந்த நோக்கங்கள் உள்ளதென குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள் அந்த நோக்கங்களின் பின்னால் உள்ளவர்களை கண்டறிய அரசாங்கம் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

வீண்விரயங்கள், வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புள்ள தேர்தல் பிரச்சார முறைமையில் இருந்த விலகி புதிய தேர்தல் முறைமையொன்றை ஏற்படுத்துவது காலத்தின் தேவையாகும் என்று கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

அர்த்தமற்ற, அதிக செலவு கொண்ட தேர்தல் பிரச்சார முறைமையை மாற்றுவது குறித்து தானும் கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார்.

விவசாய பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வரும் பிரதேசங்களில் குளங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் அழிவடைந்து வருவதாக தம்மாலங்கார மகாநாயக்க தேரர் குறிப்பிட்டார்.

அவற்றை திருத்தியமைப்பதற்காக அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதாக ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார். (ம-3)

## ஜெயவர்த்தனபுர...

அவர் வசித்த பிலியந்தலை சித்த முல்ல பகுதியில் சுகாதார பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

எனினும் இவரது உயிரிழப்பு கொரோனாத் தொற்றால் ஏற்பட்டது என்பதனை சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தவில்லை. (ம-3)

## மனித உடலுக்கு கொரோனா செல்...

இவ்வாறான நிலைமைகளில் கொரோனா வைரஸானது வளியின் சிறுதுணிக்கைகள் ஊடாக மனித உடலுக்குள் செல்வதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வுஹான் நகரில் உள்ள இரண்டு வைத்தியசாலைகளின் கழிவறைகள், முழு சன நெரிசல்மிக்க அறைகள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் உடைமாற்றும் அறை போன்றவற்றின் வளிப்பரப்பில் கொரோனா வைரஸின் மரபணு பொருட்கள் அடங்கிய வளித்துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு இயற்கை ஆராய்ச்சி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த வைரஸானது எந்த அளவுக்கு வீரியமாக வளியின் ஊடாக பரவுகிறது என்பது குறித்த தெளிவான விளக்கம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும் இது மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலேயே நிகழக்கூடும் என்றும், சீனாவில் சுமார் 75 ஆயிரம் கோவிட்-19 நோயாளர்களிடம் நடாத்தப்பட்ட ஆய்வில் எவருக்கும் வளியின் ஊடாக இந்த வைரஸ் பரவி இருக்கவில்லை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ம-3)

## கடும் எதிர்ப்புக்கு மத்தியில்
# படையினரால் கையகப்படுத்தப்பட்ட வற்றாப்பளை மகா வித்தியாலயம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட வற்றாப்பளை மகா வித்தியாலயம், தனிமைப்படுத்தல் முகாம் அமைப்பதற்காக மக்களின் எதிர்ப்பையும் மீறி நேற்று கையகப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை பாடசாலை வளாகத்தின் வசதிகளை பார்வையிட்டு அங்கே விடுமுறை முடித்து முகாம்களுக்கு திரும்பும் படையினரை 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி கண்காணிப்பதற்காக பாடசாலை வளாகத்தை பெற நடவடிக்கை மேற்கொள்வதை அறிந்த கிராம மக்கள் பாடசாலை வாயில் கதவை மறித்து படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த பகுதிக்கு இராணுவத்தினர், பொலிஸார், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வரவழைக்கப்பட்டு மக்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், மக்கள் அதற்கு சம்மதிக்காத நிலையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று கொண்டிருந்த சமயத்தில் இராணுவத்தினர் சிலர் பாடசாலை வளாகத்தில் துப்பரவு செய்வதற்குரிய பொருட்களுடன் வருகை தந்து பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

இந்த செயற்பாடுகளுக்கு மக்கள் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்ட போதும் இராணுவத்தினர் 15 நாட்களுக்குள் இந்த செயற்பாடு நிறைவு பெறும் என்றும், இந்த 15 நாட்களுக்கு மாத்திரம் பாடசாலையை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்தனர்.

அதன் விளைவாக மக்கள் எதிர்ப்புக்களையும் மீறி குறித்த பாடசாலை தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனா...

இதுவரை 134 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

478 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 30-50 வயதினருக்கு கொரோனா பாதிப்பால்...

சிலர் ஸ்ரோக்கால் திடீரென எதிர்காலத்தில் உயிரிழப்பைச் சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளனர்.

த வோஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட செய்தியிலும் கூட இளம் மற்றும் நடுத்தர வயதில் உள்ளவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டால் இளம்வயதிலேயே திடீரென ஸ்ரோக்கால் உயிரிழக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளது.

இந்த வயதில் இருப்போருக்கு தங்களின் உள்ளுறுப்புகள் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளதா எனத்தெரியாமல் இருக்கும் போது திடீரென மரணம் சம்பவிக்கும் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் 30 முதல்50 வயதுக்குள் இருக்கும் வயதினர் கொரோனா பாதிப்பு ஏற்படாமல் தடுக்கவும், அவ்வாறு பாதிக்கப்பட்டாலும் தீவிர பரிசோதனை செய்வது அவசியம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் பல மருத்துவமனைகளில் இளம் வயதினர் இந்த பாதிப்புகளை அடைந்துள்ளதால், கொரோனா வைரஸ் இது போன்ற புதிய பாதிப்புகளை ஏற்படுத்துமா என்று மருத்துவர்கள் குழப்பத்திலும் வியப்பிலும் உள்ளனர். இதுபோன்ற பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அமெரிக்காவில் குறைவாக இருந்தாலும் இளம் வயதினருக்கு பாதிப்பை ஏற்படுத்தி கொரோனா வைரஸ் மருத்துவர்களுக்கு சவாலாக மாறியுள்ளது என த வோஷிங்டன் போஸ்ட் செய்தி தெரிவிக்கிறது.

பெரும்பாலும் கொரோனா வைரஸ் ஒருவரை தாக்கும் போதும் அவரின் நுரையீரலுக்குத்தான் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது இதுவரை ஆய்வுகளில் கண்டறியப்பட்டு இருந்தது. ஆனால், இளம் வயதினர், நடுத்தர வயதினர் பாதிக்கப்பட்டால் அவர்களின் உடலின் முக்கிய உள்ளுறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு ஸ்ரோக் வந்த இளம் வயதினர் சிலர்தான் இருக்கிறார்கள் என்றாலும், சீனாவின் வுஹான் நகரில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளுக்கு திடீரென ஸ்ரோக் ஏற்பட்டதும், பலர் அபாய கட்டத்துக்கு சென்றனர், பலர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்த ஆய்வுகளை அமெரிக்காவின் பிட்ஸ்பர்க் மருத்துவ மையத்தின் பேராசிரியர் ஷெரி சோ செய்து வருகிறார்.

மேலும் இளம்வயதினர், நடுத்தர வயதினர் கொரோனாவில் பாதிக்கப்பட்டால் ஸ்ட்ரோக் வர வாய்ப்புள்ளது. திடீர் மரணம் ஏற்படலாம் என்று ஒப்புக்கொண்டு அமெரிக்காவின் முக்கிய மருத்துவமனைகள் விரைவில் அறிக்கை வெளியிட உள்ளன.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஸ்ரோக்கைத்தான் பெரும்பாலும் சந்திக்கலாம். குறிப்பாக எல்.வி.ஓ எனப்படும் மூளைக்கு செல்லக்கூடிய இரத்தக்குழாயைப் பாதித்தல், பேச்சு, முடிவு செய்யும் திறனை பாதித்தல் போன்றவை நிகழலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் இளம்வயதில், நடுத்தர வயதில் இருக்கும் பெரும்பாலான கொரோனா நோயாளிகள் உடலில் இரத்த குழாய்களில் அடைப்பு ஏற்படும் பிரச்சினைகளை அதிகமாகச் சந்திக்கலாம். இந்த இரத்த குழாய் அடைப்பால் சில நேரங்களில் மூச்சு விடுவதில் பிரச்சினையும், மாரடைப்பும் ஏற்படலாம். சில நேரங்களில் இவை இரண்டுக்கும் வாய்ப்பில்லாத நிலையில் மூளையை பாதித்து ஸ்ரோக் ஏற்படும்.

அமெரிக்க மருத்துவர்கள் கூறுப்படி, நியூயோர்க் நகரில் பெரும்பாலான மக்கள் அவசர உதவிக்கு அழைத்தபோது, அவர்களை காப்பாற்ற சென்ற மருத்துவ உதவியாளர்கள் அவர்களை காப்பாற்றுவதற்குள் திடீரென ஸ்ரோக் ஏற்பட்டு பலர் இறந்துள்ளனர் என்று கவலை தெரிவிக்கிறார்கள். ஆனால் அவ்வாறு இறந்தவர்களின் உடல்களை உடற்கூறு செய்திருந்தால் பாதிப்பு தெரிந்திருக்கும். ஆனால் அதற்கான சூழல் அங்கு இல்லை என வோஷிங்டன் போஸ்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

ஊரடங்கு மற்றும் தனிமைப்படுத்தலை

# மதிக்காத நபருக்கு 600 ரூபாயே யாழ்.நீதிமன்றத்தால் தண்டம் விதிப்பு

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறியமை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மதிக்காது நடந்தமை ஆகிய இரண்டு குற்றங்களுக்காக நபர் ஒருவருக்கு 600 ரூபாய் தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் வீதியில் பயணித்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். அவருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்டமை, தண்டனைச் சட்டக்கோவை 264 ஆம் பிரிவின் கீழ் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ள இடங்களில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிகளை அறிந்திருந்தும் அதனை மதிக்காது நடந்து கொண்டமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் அந்த நபர் மீது முன்வைத்து குற்றப்பத்திரம் பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டார். அவருக்கு குற்றப்பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. சந்தேகநபர், தன்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டார்.

அதனால் அவரை குற்றவாளியாக இனங்கண்ட மன்று, ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றத்துக்கு 100 ரூபாய் தண்டப் பணமும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமைக்காக 500 ரூபாய் தண்டப்பணமும் விதித்து உத்தரவிட்டது.

இதேவேளை, இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 264ஆம் பிரிவின் கீழ் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ள இடங்களில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிகளை அறிந்திருந்தும் அதனை மதிக்காது நடந்து கொள்ளும் நபர் ஒருவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை அல்லது ஆயிரத்து 500 ரூபாயை விஞ்சாத தண்டம் அல்லது சிறை மற்றும் தண்டப்பணம் அறவீடு ஆகிய தண்டனைகளை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


# பெரும் ஆபத்தை ஏற்படுத்திய 206ஆவது கொரோனா நோயாளி

ஜாஎல சுதுவெவ பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட போதைப்பொருள் அடிமைக்குள்ளான கொரோனா நோயாளியினால் முழு நாடுக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த நோயாளி கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார். அன்றைய தினம் இரவு பமுனுகம பொலிஸ் பிரிவில் வைத்து இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நபர் போதைப்பொருளுக்கு அடிமையாகிய ஒருவராவார்.

திருட்டுச் சம்பவம் ஒன்றிற்கு சென்ற சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் பமுனுகம பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். அவர் சில நோய் நிலைமையில் காணப்பட்டமையினால் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் தனது அருகில் இருப்பவர்கள் குறித்து சிந்திக்கவில்லை. அவர் போதைப்பொருளுக்கு அடிமையாகியமையினால் அவற்றினை குறித்து சிந்திக்கவில்லை.

எனினும் இறுதியில், தென் கொரியாவின் 31வது பெண் நோயாளி போன்றாகிவிட்டார். குறித்த பெண் தனக்கு கொரோனா நோய் தொற்றியிருந்த நிலையில் 9000 பேர் பங்குபற்றி தேவாலய ஆராதனையில் கலந்து கொண்டர். அவர்களில் 3000 பேர் இந்த நோய் தொற்றிற்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலைமையும் அவ்வாறுதான் உள்ளது. இந்த நோயாளி கைது செய்யப்பட்ட பின்னர் 12 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையத்தில் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

முழுக் கிராமத்தையே முடக்க நேரிட்டது. இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தங்கள் கடமையை சரியாக செய்துள்ளனர்.

எனினும் 206வது நோயாளியினால் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# ஊரடங்கை மீறியவர்களின் கைது 40 ஆயிரத்தையும் தாண்டியது

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டதாக ஒரு மாதமும் ஒரு வாரமும் கடந்துள்ள நிலையில், அதற்கு புறம்பாக செயற்பட்டதாக 40 ஆயிரத்து மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 10 ஆயிரத்து 560 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

வைரஸ் தொற்றினால் ஏற்படும் நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி நாடுபூராகவும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

தற்போது இடர்வலயங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு மீண்டும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆறு மணி வரையிலான 24 மணித்தியாலயத்திற்குள் மாத்திரம் 1128 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் தங்களது அத்தியாவசிய தேவைகளை பெற்றுக் கொள்வதற்கு ஏற்றவகையில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு, பின்னர் மீண்டும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்த காலப் பகுதியில் அதற்கு புறம்பாக செயற்பட்டதாக இதுவரையில் 41 ஆயிரத்து மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 10 ஆயிரத்து 560 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## மரண அறிவித்தல்

### வே.ச.விசுவலிங்கம் சபாநாதன் J.P

(ஓய்வுநிலை காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
நயினையூர் இந்து கலாசார அபிவிருத்திச் சபை செயலர்,
நயினை மீனாட்சி அம்மன் ஆலய முன்னாள் தவிசாளர்,
நயினை நாகபூஷணி ஆலய முன்னாள் அறங்காவலர் சபைப் பொருளாளர்)



நயினைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் சபாநாதன் நேற்று (28.04.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வே.ச.விசுவலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - கண்மணி தம்பதிகளின் மருமகனும் தவமணியின் (ஓய்வுநிலை அதிபர்) அன்புக் கணவரும் திருமதி பாமதி சத்தியேஸ்வரனின் பாசமிகு பெரிய தந்தையும் பிரசாந், சாம்பவி, விநோத், ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான யோகநாதன், வேதநாதன், புண்ணியநாதன் மற்றும் மகேஸ்வரநாதன், மீனாட்சி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமேஸ்வரி, மாலினிதேவி, நவநீதகிருஷ்ணன் மற்றும் சொர்ணம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2020) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (2650)

தகவல்:- தவமணி சபாநாதன்
(மனைவி)

## மரண அறிவித்தல்

மண்ணில்
1960 - 08 - 26



விண்ணில்
2020 - 04 - 28

### வீரகத்தி குருசாமி

(உரிமையாளர் - வானதி அரிசி ஆலை,
சாமியன் அரசடி, கரவெட்டி)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி, தச்சன்தோப்பு வீதி, சம்பந்தர் கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி குருசாமி அவர்கள் நேற்று (28.04.2020) செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்கள் வீரகத்தி - செல்வநாயகி தம்பதியரின் அன்புப் புதல்வரும் அமரர்கள் வீரகத்தி (குமாரு) - இலட்சுமி தம்பதியரின் மருமகனும் அமரர்களான குமாரசாமி, கிருஷ்ணசாமி மற்றும் கந்தசாமி (உரிமையாளர் - EVK Transport) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி செல்வநாயகியின் (றஞ்சி) அன்புக் கணவரும் அஜிந்தா, ஆர்த்திகா (மாணவி - மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம் 40ஆவது அணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. பார்த்தீபனின் (வைத்திய அதிகாரி - அநுராதபுரம் வைத்தியசாலை) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2020) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, தச்சன்தோப்பு வீதி,
சம்பந்தர் கடையடி (C-9546)

தகவல்:-
குடும்பத்தினர்